# நம்பிக்கை ஒளி
## Ray of Hope


நம்பிக்கை ஒளி
Ray of Hope

துவண்டோர் துயர் துடைத்து ஒளியேற்றுவோம்

April 2016 | FREE NEWSPAPER | இதழ் - 12



G05, Courtenay House, 10 Courtenay Road, East lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK
facebook.com/theroh.org www.theroh.org Email: roh@theroh.org Tel: (0044)2086179343 Mobile: 07853071088


## இலண்டன் நம்பிக்கை ஒளி பத்திரிகை

ஒரு வருடம் தாண்டி வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகிறது.

தாயக உறவுகளின் சுமைகளைத் தாங்கி இலண்டனில் வெளிவரும் நம்பிக்கை ஒளி பத்திரிகை இம் மாத இழலுடன் ஒருவருட நிறைவுகண்டுள்ளது. எமது வெற்றிப்பாதையில் கை கோர்த்த அனைத்து வாசகப் பொருமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றது நம்பிக்கை ஒளி பத்திரிகையின் செய்திப்பிரிவு. தொடர்ந்தும் உங்கள் ஆதரவுடன் எமது ஊடகப்பணி தொடரும்... துவண்டோர் துயர்துடைத்து ஒளியேற்ற நம்பிக்கை ஒளி பத்திரிகையுடன் இணைந்திருங்கள்.



## இறுதிக்கட்ட யுத்தத்தில் இழந்தது மீண்டும் கிடைத்ததா?


03 **யுத்தத்தில் பாதிக்கப்பட்ட**
மூன்று பல்கலைக்கழக மாணவிகளையும் 21 பாடசாலை மாணவர்களையும் பொறுப்பேற்று தொடர்ச்சியாக கல்வி கற்பிக்கும் இலண்டன் நம்பிக்கை ஒளி.

02 **பல்கலைக்கழக மாணவியின் கண் பார்வையை**
சத்திர சிகிச்சை மூலம் மீட்டுக் கொடுத்தது இலண்டன் நம்பிக்கை ஒளி..!

06 **அழிந்துவரும் வலைஞர்மடம்**
அரசினர் தமிழ் கலவன் பாடசாலை..!

07 சிறுவர்கள் மத்தியிலும் தொற்றிக் கொள்ளும் போதைப் பழக்கம்
வட – கிழக்கில் தீயாய் பரவும் போதை வஸ்துக்கள்..!

08 கிராமப்புறங்களில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு மாலைநேரத்திரல் இலவச கல்வி அவசியம்தானா..?

04 "ரீச்சர் இன்றைக்கு நான் சாப்பிடல. வீட்டை சமைக்க ஒன்றும் இல்லை. அதனால் அப்படியே வந்து விட்டேன்..!



# பல்கலைக்கழக மாணவியின் கண் பார்வையை சத்திர சிகிச்சை மூலம் மீட்டுக் கொடுத்தது இலண்டன் நம்பிக்கை ஒளி..!

எமது வாழ்க்கை வட்டத்தில் பொது மொழி ஒன்றை நாம் பயன்படுத்துவது வழக்கம். "நம்பிக்கைதான் வாழ்க்கை" என்பது தான் அந்த பொது மொழியாகும். வாழ்க்கையை வெறுமனே நம்பிக்கையோடு மட்டும் கொண்டு செல்பவர்கள் இன்றும் எம் மத்தியில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். உலகத்தைப் பார்க்க முதலில் கண்கள் அவசியமாகிறது. கண்களின் பார்வை அற்றுப் போகுமானால் நிச்சயம் அவனால் தனியாக எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது.

இன்னொருவரின் துணை கட்டாயம் தேவைப்படும். அந்தக் கட்டாயத்தில் இருந்து மீண்டுவர இலண்டன், நம்பிக்கை ஒளி நிறுவனம் ஒரு பெண்ணிற்கு பார்வையை திரும்ப வரவழைப்பதற்கான முயற்சியின் சத்திரசிகிச்சைக்கு ரூபா ஒருலட்சம் (100,000/=) கொடுத்து உதவியுள்ளது.

கருணாகரன் கஜேந்தினி என்பவருக்குத் தான் கண்ணில் இரண்டாவது முறையாகவும் சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. இவரது குடும்பம் ஓர் ஏழ்மையான குடும்பம். கஜேந்தினிக்கு தரம் 12 இல் கல்வி பயிலும் கிருஸ்ணவேணி, தரம் 10 இல் கல்வி பயிலும் கோகுலவதனி என்னும் இரு தங்கைகளும் உள்ளனர். கஜேந்தினியும் கற்றலில் சளைத்தவரல்ல. மிகவும் ஆர்வத்துடன் கற்கக் கூடிய ஒருவர். இவரது தாய் வீட்டில் தான். தந்தை தோட்ட வேலைகள் செய்வார். தற்போது குடும்பத்தின் பாரம் கஜேந்தினியின் மேல் விழுந்திருக்கின்றது. காரணம் தந்தைக்கும் இயலாத நிலை. கடந்த பதினொரு வருடங்களாக குருதிப் புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

கஜேந்தினியின் குடும்பம் யாழ்ப்பாணத்தில் சுழிபுரம், தொள்புரம் என்னும் இடத்தில் வசித்து வருகிறனர்.

1992ம் ஆண்டு யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்து மன்னார், இலுப்பைக் கடவையில் வசித்து வந்தார்கள். 1997ம் ஆண்டு மீண்டும் சொந்த ஊருக்குத் திரும்பி அங்கேயே வசித்து வருகின்றார்கள். கஜேந்தினி தற்போது விமான பயணச் சீட்டு வழங்கும் தனியார் நிறுவனமொன்றில் பணி புரிகின்றார். இரண்டு வயதிலேயே கஜேந்தினியின் கண்ணைப் பரிசோதிக்குமாறு அவரது வகுப்பாசிரியர் கூறவே யாழ்ப்பாண வைத்தியசாலைக்குச் சென்று மாத்திரைகளைப் பெற்று உட்கொண்டு வந்தார். இதன்போது மூக்குக் கண்ணாடி அணிய வேண்டிய கட்டாய நிலையும் ஏற்பட்டது. காலங்கள் கடந்து செல்ல கண்ணினுடைய பார்வைத் திறனும் குறையத் தொடங்கியது.



க.பொ.த சாதாரண தரத்தில் மிகவும் கஸ்டப்பட்டு கல்வி கற்று சித்தியடைந்து உயர் தரத்தையும் தொடர்ந்தார். கற்றலுக்கு கண் பாரிய முட்டுக் கட்டையாகவே காணப்பட்டது. இதனால் கடந்த 2011 ஆம் ஆண்டு கண்டி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்ற போது காலம் கடந்து விட்டதாகவும், கண்ணில் சிறு துவாரம் போன்று காணப்படுவதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். இதற்கு தீர்வாக உடனடியாக் சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் எனவும் கூறினர்.

சத்திர சிகிச்சை செய்ய முடிவாகிய அதே ஆண்டிலேயே மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கஜேந்தினியின் கண்ணின் சத்திரசிகிச்சை முடிந்தது.

பதினைந்து நாட்கள் பார்வை நன்றாகத் தான் இருந்தது. அதன் பிற்பாடு பார்வையில் குறைவுத் தன்மை தென்பட ஆரம்பித்தது. நாட்கள் செல்ல சரியாகிவிடும் என்கின்ற எண்ணத்தோடு வைத்தியர்களின் ஆலோசனைப் படி நடந்து கொண்டார் கஜேந்தினி.

தொடர்ந்தும் கற்றலில் ஈடுபட தீர்மானித்தவர் யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் டிப்ளோமாவைத் தொடர்ந்தார். இதன்போது கற்றலில் கூர்ந்து கவனித்தல் என்பது பாரிய பிரச்சனையாகவே காணப்பட்டது. விரிவுரையாளர் விளங்கப்படுத்தும் பாடங்களை பின்னர் மீண்டும் சக மாணவர்களிடம் கேட்டே சரிசெய்து கொள்வார். கேட்கும் திறனை வைத்தே தனது கற்றலை மேம்படுத்தினார் கஜேந்தினி.

எனினும், முதல் தடைவ சித்திபெற இயலவில்லை. மீண்டும் இரண்டாவது முறை முயற்சித்து ஆசிரியர்களிடம் மேலதிக வகுப்புக்களுக்கும் சென்று சித்தி பெற்றார். இது கஜேந்தினியின் கடின உழைப்பிற்கு கிடைத்த வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

இதன் விளைவாக கஜேந்தினி பல்கலைக் கழகம் தெரிவாகியும் கண்பார்வை கோளாறு காரணமாக இவளால் மேற்படிப்பை தொடரமுடியவில்லை.

கண்ணின் பார்வை அறவே அற்றுப்போக மீண்டும் சத்திர சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டது. எனினும் தந்தையினதும் தனது வருமானத்தைக் சேர்த்தால் கூட சத்திர சிகிச்சைக்கு பணம் போதுமானதாக இருக்கவில்லை. இதனால் இலண்டன், நம்பிக்கை ஒளியிடம் ஒரு தொகைப் பணத்தை மருத்துவ உதவியாக தருமாறு கோரியிருந்தார். இதனையடுத்து கஜேந்தினியின் வறுமையையும் அவரது செயல்திறனையும் பார்த்து ரூபா 100,000/= உதவியாக வழங்கப்பட்டது. இதனால் மிகுந்த மகிழ்ச்சியடைந்த கஜேந்தினி மிகுதிப் பணத்தை தான் பணிபுரியும் இடத்தில் கடனாகவும் பெற்றுக் கொண்டார்.

கடந்த மாசி மாதம் பத்தொன்பதாம் திகதி கஜேந்தினிக்கு மீண்டும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. தற்போது ஓய்வில் இருக்கிறார் கஜேந்தினி. முதலில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும் போது சிலிக்கன் எண்ணையைப் பயன்படுத்தி துவாரத்தை அடைக்க முயற்சித்திருந்தார்கள். அதனை அகற்றியே இப்போது மீண்டும் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. ஒட்டிய சிலிக்கன் எண்ணையை அகற்றியதால் விழிவெண்படலத்தில் கலக்கம் ஏற்பட்டது. சில மாதங்கள் செல்ல கலக்கம் உறைந்து கண் பார்வை வழமைக்குத் திரும்பும் என வைத்தியர்கள் கூறியதால், அந்த நம்பிக்கையோடு இருக்கின்றார் கஜேந்தினி.

கஜேந்தினியின் ஒரு கண்ணில் தான் சத்திரசிகிச்சை செய்யப்பட்டாலும் இன்னொரு கண்ணுக்கும் பார்வை தெளிவில்லை என்பதும் சோகம் தருவதாகத் தான் உள்ளது. சத்திர சிகிச்சைக்காக பணமின்றி தடுமாறிய போது தனது பார்வையில் அக்கறை கொண்டு அவசரத்தில் உதவிய இலண்டன், நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்கு தனது விழிகளில் நீர் கசிய நெஞ்சார்ந்த நன்றிகளைப் பகிர்ந்து கொண்டார். கஜேந்தினியின் கண்கள் இரண்டுமே மீண்டும் இந்த உலகத்தைத் தெளிவாக பார்க்க நாமும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

# யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மூன்று பல்கலைக்கழக மாணவிகளையும் 21 பாடசாலை மாணவர்களையும் பொறுப்போற்று தொடர்ச்சியாக கல்வி கற்பிக்கும் இலண்டன் நம்பிக்கை ஒளி.

ஈழப் போரின் வடுக்கள் தாங்கி வாழ்ந்து கொண்டிருக்கும் வட கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் பலர் குப்பி விளக்குகளில் கல்வி கற்று பல்களைக் கழகம் செல்வதற்கு அனுமதி பெற்றும் மேற்படிப்பை தொடர்வதற்கு வசதிகளின்றி வீட்டில் முடங்கி கிடக்கும் நிலை காணப்படுகின்றது.

இதே போன்று கற்றல் உபகரணங்கள், சீருடை, உணவு, வசதிக்கட்டணம், புத்தகங்கள், பாதணிகள் போன்றவற்றை பணம் கொடுத்து வாங்குவதற்கு வசதி இல்லை என்பதற்காக பல மாணவர்கள் பாடசாலைக் கல்வியைக் கூட இடைநிறுத்தும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு வறுமையில் தமது பாடசாலைக் கல்வியையும் பல்கலைக்கழக மேற்படிப்பையும் இடைநிறுத்தும் நிலையில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கிராமப்புறங்களில் வறுமையில் வாடும் மாணவர்களை கிராம சேவையாளர்கள் மூலம் இனம் கண்டு அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கோடு இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனம் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக மூன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கும் 22 பாடசாலை மாணவர்களுக்கும் மாதாந்தம் கல்வித் தேவைக்கான ஊக்குவிப்பு தொகை கொடுக்கப்பட்டு அவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு தொடர்ச்சியாக கல்வி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டு உதவியின் முதல் நிகழ்வு வவுனியாவில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வடமாகணசபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா, எம்.பி.நடராஜா தாயகத்தில் இருந்து இலண்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஆர்.நவபாலன், ரி.தனரூபன், மற்றும் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தர் விமலதாஸ், இசைக்கலைஞனும் வளவாளருமான நிமால், இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சார்பாக ப.சுபாஸ்கரன், கோ.ரூபகாந், பார்த்தீபன், கயூபன் ஆகியோர் கலந்து கொண்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்விக்கான உதவித்திட்டத்தை வழங்கிவைத்தனர். இதன் மூலம் இம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு ஒளியேற்றி வைத்தனர்.





காணி திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்
திரு. விமலதாஸ்



வடமாகாண சபை உறுப்பினர்
திரு. இந்திரராஜா



வடமாகாண சபை உறுப்பினர்
திரு. நடராஜா









# 'ரீச்சர் இன்றைக்கு நான் சாப்பிடல. வீட்டை சமைக்க ஒன்றும் இல்லை. அதனால் அப்படியே வந்து விட்டேன்..!

## முல்லை மாவட்டத்தில் பசியில் வாடும் மாணவர்களின் அவலக் குரல்...

யுத்தம் முடிவடைந்து 7 வருடங்கள் கடந்த நிலையில் கூட வடக்கின் அவல நிலை இன்றும் தொடர்கிறது. அதிலும் யுத்தகாலத்தை விட மிகவும் மோசமாக வடக்கின் சில பகுதிகள் தற்போதும் இருக்கின்றது. குறிப்பாக வடக்கில் மீள்குடியேற்றம், வீட்டுத்திட்டம், தொழில் வாய்ப்பு, அடிப்படை வசதிகள் என பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்துவரும் மக்கள் இன்றும் இருக்கிறார்கள்.

இத்தகைய பாதிப்புக்களை வெகுவாக எதிர் நோக்கியுள்ள இறுதிப் போரின் சாட்சியமாகவுள்ள முல்லைத்தீவு மாவட்டமே. இங்கு நாளாந்தம் ஒரு வயிறு சோற்றுக்காக போராடும் நிலையில் பல குடும்பங்கள் இன்றும் வாழ்கிறார்கள். அதற்கு சான்றாக முல்லைத்தீவு மாவட்டத்தின் சிலபாடசாலைகளில் இடம் பெறும் காலை ஓன்று கூடல் பதிவுகள் சாட்சியங்களாகின்றன.

கடல் வளமும், வயல் வளமும், தென்னை- பனை வளமும் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட மக்கள் யுத்தம் இடம் பெற்ற காலத்தில் கூட கடற்படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் கரையோர மீன்பிடியில் ஈடுபட்டு வாழ்வை வளமாக நடத்தியவர்கள். அங்குள்ள விவசாய குடும்பங்கள் கூட உரப்பாவனை தடை, கிருமிநாசினி தடை என அரசின் வன்னிக்கான பொருளாதார கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் விவசாயம் செய்து தமது சீவியத்தை மேற் கொண்டவர்கள். ஆனால் யுத்தம் முடிவடைந்து ஆண்டுகள் பல கடந்து அபிவிருத்தி என சொல்லுகின்ற வேளையில் அந்த மாவட்டத்தில் ஒருவயிறு சோற்றை பெற முடியாத நிலை சில வீடுகளில் ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவின் கொக்கிளாய், தண்ணீருற்று, செம்மலை, அளம்பில், வலைஞர்மடம், தேவிபுரம், நெத்தலியாறு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் தினமும் காலைப் பிரார்த்தனையின் போது 4, 5 மாணவ, மாணவிகள் மயக்கமடைந்து விழுகிறார்கள்.

அவர்களை தூக்கிச் சென்று மேசை ஒன்றில் அமர்த்தி தண்ணீர் தெளித்து காற்று விசுக்கும் போது மயக்கம் தெளிந்து அந்த மாணவர்கள் சோர்வுடன் எழும்புகிறார்கள். அவர்களிடம் மயக்கத்திற்கான காரணத்தை வினவும் போது ஒவ்வொரு குடும்பத்தின் பின்னும் உள்ள அந்தசோகம் நிறைந்த அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகின்றது.

**'ரீச்சர் இன்றைக்கு நான் சாப்பிடல. வீட்டை சமைக்க ஒன்றும் இல்லை. அதனால் அப்படியே வந்து விட்டேன்'**

என அந்த மாணவர்கள் கூறுகின்ற பதில்கள் அந்த ஆசிரியர்களையே ஒரு கணம் கண் கலங்க வைத்துள்ளது. ஒரு காலைப் பொழுது மட்டுமல்ல சிலமாணவர்கள் முதல் நாள் இரவு கூட சாப்பிடாமல் இருந்து விட்டும் பாடசாலை செல்கிறார்கள். அவ்வாறு செல்கிறது அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்கான போராட்டம். ஆசிரியர்கள் பாடசாலைககளில் தம்மால் முடிந்ததை அந்த மாணவர்களுக்கு வாங்கிக் கொடுத்து விட்டு வகுப்புறைக்குச் அழைத்துச் செல்லும் சம்பவங்கள் கூட நடந்து வருகின்றது. அப்படியான மோசமான நிலையில் முல்லைத்தீவின் சிலபகுதிகள் பொருளாதாரரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது. நாளாந்த குடும்ப சீவியத்தை மேற் கொள்ள முடியாத நிலையில் இங்கு பல குடும்பங்கள் வாழ்கின்ற போது **அரசாங்கம் கூறும் அபிவிருத்தி எங்கு செல்கிறது...? அரசாங்கத்தின் வாழ்வாதார உதவிகள் யாருக்கு வழங்கப்படுகிறது..? எனபல வினாக்கள் இங்கு எழவே செய்கின்றது. வீதிகள் போடுவதும், கட்டடங்கள் கட்டுவதும் தான் அபிவிருத்தி என்றால் மக்கள் அற்ற ஒருமாயானத்தையே நாம் காண வேண்டிவரும்.**

இப் பகுதியில் வாழும் குடும்பங்கள் பல இன்று ஒரு நாள் சீவியத்திற்கு கூட கடற் தொழிலை செய்ய முடியாத நிலையில் உள்ளது. காரணம் இந்திய மீனவர்களின் ஊடுருவல், தென் பகுதி மீனவர்களின் வருகை என நவீன இயந்திர படகுகளின் துணையுடன் முல்லைத்தீவுக்குள் பிரவேசித்து அங்குள்ள மீன்வளத்தை சூறையாடி விட்டுச் செல்கின்றனர். இதனால் இப்பகுதி மீனவர்கள் மீள்வளத்தை பெற முடியாது தவிர்கின்றனர். மீள்குடியேறி மெல்ல மெல்ல தமது வாழ்வை கட்டியெழுப்பும் இவர்கள் போதிய மீன் படாமையால் வருமானம் இன்றி சீவியத்தை போக்க முடியாது அல்லல் படுகிறார்கள்.

சில பகுதிகளில் சீவல் தொழில் செய்யும் மக்களும் வாழ்கின்றார்கள். தற்போது மதுபானசாலைகளின் வருகை காரணமாக கள்ளுவாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்பது ஒருபுறமிருக்க, அதைவிடமிகவும் முக்கியமான பிரச்சனை போரின் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல ஆயிரக்கணக்கான தென்னை, பனை மரங்கள் அழிக்கப்பட்டு விட்டது. இதனால் சீவல் தொழில் செய்யும் மக்கள் பலரும் தமது பரப்பரைத் தொழிலை இழந்து வருமானத்தைப் பெற முடியாது போராடும் நிலையில் இருக்கிறார்கள். போரின் போது பயன்படுத்தப்பட்ட குண்டுகளின் நச்சுப் பதார்தங்கள் கூட அப்பகுதியில் விவசாய நடவடிக்கையின் விளைச்சலைக் கட்டுப்படுத்தியே வருகிறது. இதனால் விவசாயத்தில் கூட போதிய விளைச்சல் இன்றி மக்கள் இன்றும் பல்வேறு வாழ்வாதார சிக்கல்களை எதிர்நோக்கியே வருகிறார்கள்.

இது தவிர, போரின் கோரத் தாண்டவத்தால் பெற்றோரை இழந்து பிறரின் அரவணைப்பில் வளரும் மாணவர்கள், குடும்பத் தலைவனை இழந்துவாழும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள மாணவர்கள் ஆகியோரின் நிலை மிகவும் மோசமாகவே உள்ளது. ஆண்கள் இருந்தும் தொழில் செய்ய முடியாத நிலை ஒரு புறம் இருக்க, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொழில் இன்றியே வாழும் பரிதாப நிலை தொடர்கிறது. அவர்களுக்கான வாழ்வாதார கட்டமைப்புக்கள் எவையும் இதுவரை ஒழுக்காக அரசாங்கமும் சரி, மாகாணசபையும் சரி செய்யவில்லை. இதனால் நாளாந்த வயிற்றுப் பசியைக் கூட இந்தக் குடும்பங்கள் போக்க முடியாது திணறுகின்றது. வறுமைக்கு மத்தியிலும் படித்து சாதித்து விட வேண்டும் என நினைக்கும் மாணவர்கள் கடும் பசியுடன் பாடசாலை செல்கிறார்கள்.

**'பசி வந்தால் பத்தும் பறந்திடும்'** என்பார்கள். அதுபோலவே மாணவர்கள் பசிக்கு மத்தியில் சென்று காலைப் பிரார்த்தனையில் பங்கேற்கின்ற போது பலமாணவர்கள் மயங்குகிறார்கள்.

தொடரும் இந்த அவல நிலைக்கு முடிவுதான் என்ன..? இந்த மாணவர்கள், குடும்பங்களின் வாழ்வில் மீண்டும் விருத்தியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு யாருடையது...? எனபல விடை தெரியாத வினாக்களுடன் இருக்கும் முல்லைத்தீவுக்கு விடிவுதான் எப்போது...?





# முன்னாள் போராளி குடும்பத்துக்கு 50,000 ரூபாய் பெறுமதியில் வாழ்வாதார உதவி..!

ஒரு மனிதனானவன் இந்தப் பூவுலகில் வாழ்ந்து இறக்கும் வரையிலும் பல்வேறு வகையிலும் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது. இயற்கை அழிவினாலும், செயற்கை அழிவினாலும் அழிந்தும் மீளப் பெற்றுக் கொள்ள முடியாது உயிர்கள் மாத்திரமே! அதிலும் மனித உயிர்கள் பகுத்தறிவு என்கின்ற ஆறாம் அறிவின் மூலம் அழிவை ஏற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுவதை அவதானிக்க முடிகிறது. துன்பம் நேரும் வேளையில் இன்னொரு மனிதனின் உதவியே அவனை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துகிறது எனலாம்.

குறிப்பாக இலங்கை தேசத்தில் முப்பது வருடங்களுக்கு மேலாக பல இனக்கலவரங்களும் யுத்தக் கொடூரங்களும் இடம்பெற்று 2009ம் ஆண்டு முடிவுக்கு வந்திருக்கின்றது. இதன்போது பல்வேறு உயிர்கள் பறிக்கப்பட்டமை தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. குறிப்பாக தமிழ் இனமே அடக்கப்பட்டு அதிக எண்ணிக்கையானவர்கள் அழிக்கப்பட்டுமிருக்கிறார்கள். 20 வருடங்களுக்கு முன்னர் கிழக்கில் இடம்பெற்ற கலவரங்கள் பல முஸ்லிம்களின் உயிர்களையும் பறித்திருந்தது. இந்த யுத்தங்களின் கொடூர வடுக்களைத் தாங்கி இன்னமும் தமிழர் தாயகப் பகுதிகளில் அநேக குடும்பங்கள் வேரறுக்கப்பட்ட மரங்களாக்கப்பட்டுள்ளனர்.

இனியும் வாழ முடியாது என்கின்ற எண்ணத்துடன் பலர் தற்கொலையும் செய்துள்ளார்கள். இவ்விதமானவர்களை இனங்கண்டு அவர்களின் வாழ்விலும் ஒளியேற்றுகின்ற கண்ணியமிக்க சேவைதனை இலண்டன், நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனம் தமிழர் தாயக பகுதிகளான வடக்கு மற்றும் கிழக்கு மட்டுமன்றி தமிழகத்திலும் பல்வேறு உதவித்திட்டங்களை முன்னெடுத்து அதனை துரிதமாக செயற்படுத்தி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

கடந்த மாதமும் பல்வேறு உதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் தேவராஜா சிவகுமார் என்பவருக்கு 50,000/= ரூபா பெறுமதியில் புதிய தையல் இயந்திரம் ஒன்று பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இவரது நிலையை நோக்கும் போது மிகவும் ஏழ்மையான குடும்பம் என்றே சொல்ல வேண்டும். சிவகுமார் 1995.03.16 அன்று விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து தலைமைச் செயலகத்தில் கடமையாற்றி வந்தார். அப்போது கண்டாவளை, கிளிநொச்சியில் இவர்கள் குடும்பம் வசித்தது. பின்னர் இறுதிக்கட்ட போரில் இடம்பெயரும் நிலை ஏற்படவே ஒவ்வொரு இடங்களாக இடம்பெயர்ந்தனர். 2009.03.23 அன்று முள்ளிவாய்க்காலில் வைத்து இடம்பெற்ற செல் தாக்குதலில் வலது கை பலத்த காயத்துக்குள்ளாகி கை இயங்க முடியாத நிலையில் இருந்தார். பின்னர் யுத்தம் முடிவுக்கு வரவே 2009.05.16 அன்று இராணுவத்தினரிடம் சரணடைந்தார்.

சரணடையும் போது கை பலத்த காயத்துக்குளாகியிருந்த காரணத்தினால் பொலநறுவை அரச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அதன் பின் மன்னம்பிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து பதவிய மற்றும் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைகளை மேற்கொண்டும், கை வழமைக்குத் திரும்பவில்லை. அதன் பின்னர் 2009.07.06 அன்று புனர்வாழ்விற்காக தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டார் சிவகுமார். புனர்வாழ்வு முடிந்த பிற்பாடு 2010ம் ஆண்டு குறித்த ஒரு நிறுவனத்தினால் அடையாள அட்டை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். அதே ஆண்டிலேயே அனிதா என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

தற்போது இவர்களுக்கு பவீசன் என்னும் 1 1/2 வயது ஆண் குழந்தை ஒன்றும் உள்ளது. சிவகுமாரின் சொந்த இடமான பருத்தித்துறையிலேயே இவர்கள் தற்போது வசித்து வருகின்றார்கள்.

கையில் ஏற்பட்ட காயத்தினால் பாரிய வேலைகள் எதுவும் செய்ய இயலாத நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள உணவு விடுதி ஒன்றில் மேசைப் பணியாளராக பணியாற்றி வருகின்றார் சிவகுமார். இருந்தும் இவரது வருமானத்தால் குடும்பச் சுமையை குறைக்க இயலவில்லை.

இதனால் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக இலண்டன், நம்பிக்கை ஒளியிடம் தனது வாழ்வாதாரத்தை மேம்படுத்த தையல் இயந்திரம் ஒன்றினைக் கோரியிருந்தார். இதனையடுத்து இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் சேவையாளர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, சிவகுமாரின் குடும்ப நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் குறித்த குடும்பத்தின் வறுமை நிலை தொடர்பான அறிக்கையை இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கு வழங்கியதுடன் அவர்களின் வாழ்வாதார தேவையை உறுதிப்படுத்தினர்.

அதனைத் தொடர்ந்து கடந்த மாதம் 50,000/= ரூபா பெறுமதியில் மின்சார தையல் இயந்திரம் ஒன்று வழங்கி வைக்கப்பட்டு, மிகுதிப் பணமும் கையளிக்கப்பட்டது.

தையல் பயிற்சி பெற்று வீட்டிலிருக்கும் சிவகுமாரின் மனைவி அயலவர்களின் ஆடைகளையும், பாடசாலை மாணவர்களின் ஆடைகளையும் தைத்து கொடுத்து அதில் வரும் வருமாணத்தில் குடும்பச்சுமையை பாதியாக குறைக்கமுடியுமென தெரிவித்ததோடு தையல் இயந்திரத்தை உவந்தளித்த இலண்டன், நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனத்துக்கும் தனது நன்றிகளையும் தெரிவித்தார்.

# அழிந்துவரும் வலைஞர்மடம்
# அரசினர் தமிழ் கலவன் பாடசாலை..!





கடல் அன்னை தாலாட்டும் முல்லைத்தீவு மண்ணின் கரையோரப் பிரதேசமே வலைஞர்மடம் கிராமம். இக் கிராமம் ஐந்து தலைமுறைகண்ட பூர்வீக கிராமம். கடந்த யுத்த காலப்பகுதிக்கு முன்னர் 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் கடல் தொழில் மற்றும் வியாபாரம் செய்து செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். இவ்வாறு சன நடமாட்டம் அதிகம் காணப்பட்ட வலைஞர் மடம் பிரதேசத்தில் மாணவர்களின் கல்வியை உயர்த்தும் நோக்கத்தோடு 1962ம் ஆண்டு இக் கிராமத்துக்கென தனி பாடசாலை ஒன்று நிறுவப்பட்டது.

முதலாம் ஆண்டிலிருந்து ஐந்தாம் ஆண்டு வரையான 230 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை பல புத்திஜீவிகளையும், கல்விமான்களையும் உருவாக்கியது. இருப்பினும், இப் பாட-சாலை தற்போது அதிபர் உட்பட 3 ஆசிரியர்கள் மாத்திரம் 15 மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

2008, 2009ஆம் ஆண்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் கிளிநொச்சி, பரந்தன், உடையார்கட்டு, மூங்கிலாறு, விசுவமடு, தேவிபுரம், புதுக்குடியிருப்பு போன்ற இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வருகை தந்த மக்கள் வலைஞர்மடம் பகுதியில் தங்கியிருந்தனர். இந்த காலப்பகுதியில் இப் பாடசாலையில் தரம் 10 வரை 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்றனர்.

யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் வலைஞர்மடம் பாடசாலை நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கு பாதுகாப்பான தங்குமிடமாகவும் பயன்படுத்தப்பட்டது.

வலைஞர்மடம் கிராமத்தில் வசித்த பல குடும்பங்கள் யுத்தத்தில் இறந்தும் எஞ்சிய குடும்பங்கள் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் காணி வாங்கி நிரந்தரமாக குடியேறியும்விட்டனர். அதிலும் எஞ்சிய 75 குடும்பங்களே தற்போது குறித்த கிராமத்தில் மீள் குடியேறியுள்ளனர்.

இங்கு மீள்குடியேறிய மக்கள் தமது பிள்ளைகள் நகர்ப்பகுதியில் இருக்கும் பாடசாலைகளிலே-யே கல்வி கற்கவேண்டுமென்று விரும்பி முல்லைத்தீவு, மற்றும் புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் இருக்கும் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கின்றனர். வசதிவாய்ப்பு குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகள் 15 பேர் மாத்திரமே வலைஞர்மடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.



பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் காலை ஒன்று கூடலில் பசியில் மயங்கி விழுவதாக அதிபர்கள் மூலம் இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்துக்கு தெரியப்படுத்தியிருந்தனர். இந் நிலையில் மாணவர்களின் கல்வித்தரம் மற்றும் அவர்களின் தேவைகளை அறிந்து கொள்வதற்காக இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை சேவையாளர்கள் வலைஞர்மடம் பாடசாலைக்கும் சென்றனர்.

அங்கு யுத்த வடுக்கள் தாங்கிய 100 அடி ஓலைக் கொட்டகையில் அமைந்துள்ள வகுப்பறை, 75 அடி நீளமுடைய சிதைவடைந்த சீமெந்து கட்டடம், பாழடைந்த கிணறு, போன்ற சூழலில் யுத்த்தில் எஞ்சிய 15 அடி நீளமுடைய ஒரு வகுப்பறை கட்டடத்தில் பாடவேளைகளை கவனித்து மணி அடித்து ஒலி எழுப்பும் அதிபர் 15 மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் இரு ஆசிரியர்களென இருண்ட பாடசாலையாக காட்சியளிக்கின்றது.

பாடசாலையின் கவர்ச்சிகளை நோக்கி மாணவர்கள் நகர்வதாலும் பாடசாலையின் பௌதீக வளங்களை பராமரித்தல், அழகுபடுத்தல், தரமான ஆசிரியர்களை நியமித்தல் போன்ற செயற்பாடுகளில் உயர் அதிகாரிகள் கவனம் செலுத்தினால் பாடசாலையின் தரம் உயர்ந்து பழைய நிலையை அடையும்.

தற்போது இப் பாடசாலையில் கல்வி கற்கும் 15 மாணவர்களும் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு புலம்பெயர் உறவுகள் கைகோர்த்து இந்த மாணவர்களுக்கான மாலைநேரக் கல்வியை வழங்குவதற்கு முன்வரவேண்டும். அதேவேளை, இம் மாணவர்களின் போசாக்கை உறுதிப்படுத்தி சத்துணவும் வழங்கவேண்டும் என்பதே பாடசாலை சமூகத்தினது ஒட்டுமொத்த எதிர்பார்ப்பு.





# சிறுவர்கள் மத்தியிலும் தொற்றிக் கொள்ளும் போதைப் பழக்கம்: வட - கிழக்கில் தீயாய் பரவும் போதை வஸ்துக்கள்..!

தமிழர் தாயக பகுதிகளான வட-கிழக்கில் என்றுமே இல்லாத புதிய பழக்கமொன்று யுத்தம் முடிவடைந்த பின்னர் கடந்த சில வருடங்களாக தீயாக பரவுவது புத்திஜீவிகள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இளம் சமுதாயத்தை குறிவைத்து, தற்போது சிறார்களையும் தொற்றிக் கொண்ட போதைவஸ்து பாவனையானது வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் அதிகரித்துச் செல்வதை காணக்கூடியதாக உள்ளது. போதைவஸ்து என்றால் என்னவென்றே தெரியாதிருந்த வன்னி மண்ணிலும் போதைவஸ்துக்களின் பாவனை தலைதூக்கியிருப்பது சமூக ஆர்வலர்களை பெரும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது.

வடக்கு, கிழக்கு மட்டுமல்ல மலையகம் மற்றும் நாடு முழுவதிலும் போதை வஸ்துக்களுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதை பல புள்ளி விபரங்கள் சுட்டி நிற்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

கல்வியிலும் வெளிக்களச் செயற்பாட்டிலும் தங்கள் கால் தடங்களைப் பதித்த இளம் சமுதாயம் இன்று, போதை வஸ்த்துக்கு அடிமையாகி தடம் மாறுகின்ற நிலையே காணப்படுகின்றது. முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு கலாசார சீரழிவுகள் தலைதூக்கியிருப்பதற்கு முக்கிய காரணம் போதைவஸ்துக்கள் தான் என்பதை எவரும் மறுக்க முடியாது. இவ்வாறான போதைப் பொருள் பாவனையினால் இளம் சமுதாயம் சிந்திக்கும் ஆற்றலை இழந்து ஏனையவர்களை சினம் கொள்ளச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுவதானது தமிழர்களின் கலாச்சாரத்தை மதித்து நடக்காததையையே எடுத்துக்காட்டுகின்றது.

பாடசாலை செல்லும் மாணவர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாவதை எவராலும் ஏற்றுக் கொள்ள இயலாது. எதிர்காலமே இளம் சமுதாயத்தினரின் கையில் தங்கியிருக்கும் நிலையில் சிறுவர்கள் தங்கள் கல்வியில் நிலையின்றி தடுமாறி பல குற்றச் செயல்கள் புரிவதற்கு முக்கிய காரணமாக இந்த போதைப் பொருள் பாவனை இருக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்குவது என்பது மிகப் பெரிய கேள்விக்குறியாகத் தான் காணப்படுகின்றது. அப்படி உருவாக்கப்பட்டாலும் அச்சமுதாயம் போதைவஸ்துக்கு அடிமைப்படாது என்பதை உறுதிபட கூற இயலாது. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்கள். கல்வி பயிலும் காலம்தனில் தங்கள் வாழ்க்கைக்கான அத்திவாரத்தை சிறப்பாக உரிய காலத்தில் இடாமல் சக நண்பர்களுடன் சேர்ந்து பல்வேறு வகையான போதை வஸ்துக்களுக்கும் அடிமையாகின்ற நிலையே தற்போது காணப்படுகின்றது. பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள் அனைத்திலும் போதைவஸ்த்துக்களின் பாவனையினால் இடம்பெறும் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய செய்திகளும் முக்கிய இடத்தைப் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. குற்றச் செயல்கள் புரிபவர்களில் அனேகர் தாங்கள் அவ்விதமான ஒரு செயலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் செய்வதில்லை. மாறாக ஒரு சிறு சந்தோசத்திற்காக நண்பர்களுடன் சேர்ந்து போதை வஸ்துக்களை பயன்படுத்தும் போது அதுவே அவர்கள் தலைவிதியை நிர்ணயித்து விடுகிறது.

பாடசாலை செல்லும் போதும், வரும் போதும், மேலதிக வகுப்புக்களுக்குச் சென்று வரும் போதும் மாணவிகள் மிகுந்த பயத்துடனேயே பயணம் செய்ய வேண்டி ஏற்படுகின்றது.

போதைவஸ்துக்களை பயன்படுத்திவிட்டு சிலர் விடும் சேட்டைகள் தான் இந்த பயத்தை உருவாக்க காரணமாக அமைகின்றது.

அண்மையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி. ம.இளஞ்செழியன் அவர்கள் உரையாற்றும் போது இவ்வாறானதொரு விடயத்தைக் சுட்டிக்காட்டியிருந்தார். வவுனியாவில் கடமையாற்றும் போது வவுனியா நகரத்தை அண்டிய எட்டு சந்திகளில் மாணவிகளுடன் சேட்டை புரியும் மாணவர்களை ஒரு நாள் கைது செய்யும் படி பொலிசாருக்கு உத்தரவிட்டாராம். அதன்படி எட்டு சந்திகளிலும் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 165 ஆகும். இது ஓர் வயதுக் கோளாறு என்றாலும் அதன் எல்லை மீறியிருந்ததையும் நினைவுபடுத்தியிருந்தார்.

இவர்களின் செயற்பாடுகள் ஏற்கனவே பொலிசாரால் கண்காணிக்கப்பட்டு நீதிபதிக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட அனைவரின் பெற்றோரையும் மன்றுக்கு அழைத்து அவர்களின் ஒவ்வோர் நடவடிக்கைகளையும் விபரித்து, கவனம் செலுத்துமாறு கூறியதுடன் கையொப்பமிட்டு அழைத்துச் செல்லுமாறு பணித்திருந்தார். மேலும் இவர்கள் பள்ளிப் படிப்பை பாதியிலேயே கைவிட்டவர்களாவர். பாடசாலை மற்றும் மேலதிக வகுப்பு நேரங்களில் இவர்கள் வீட்டை விட்டு வெளியே வர கூடாது என அறிவுறுத்தி அனுப்பியிருந்தார். அத்தோடு இவர்கள் பாரிய குற்றங்களுடன் தொடர்பற்றவர்கள் என்றாலும் எமது கலாச்சாரத்தை சீரழிக்க வித்திடும் ஓர் செயற்பாடாகவே இதனைத் தான் கணிப்பதாக குறிப்பிட்டிருந்தார். (போதைவஸ்துக்களும் இதற்கு ஓர் காரணம் என்பதை அவரது பேச்சிலிருந்து உணர முடிந்தது.) அது மட்டுமல்லாது யுத்தம் கொடூரமாக இடம்பெற்ற காலப்பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் இல்லை எனவும்

10ஆம் பக்கத்தை பார்க்க

# கிராமப்புறங்களில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு மாலைநேரத்தில் இலவச கல்வி அவசியம் தானா..?









ஒரு கிராமத்தின் வளர்ச்சியானது அந்தக் கிராமத்தின் அடிப்படைக் கல்வியிலேயே . தங்கியிருக்கின்றது. ஒரு கட்டடத்திற்கு அஸ்திவாரம் தரமாக இடப்படாவிட்டால் அந்தக் கட்டடம் நெடு நாட்களுக்குத் தாங்கக் கூடிய வல்லமையை பெற்றிருக்காது. அதே போன்று தான் கல்வி அறிவில் ஒவ்வொருவரும் சிறந்து விளங்குவார்களேயானால் அந்தக் கிராமமே வளர்ச்சியடைவதைக் காண முடியும். ஒவ்வொரு பின்தங்கிய கிராமங்களின் வளர்ச்சியானது எதிர்காலத்தில் நாட்டினுடைய வளர்ச்சியிலும் பாரிய பங்களிப்பினை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இலண்டன், நம்பிக்கை ஒளி தன்னார்வத் தொண்டு நிறுவனம் வடக்கு, கிழக்கில் பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை அறிந்ததே. இதில் மருத்துவ உதவி, வாழ்வாதார உதவி மற்றும் கல்வி உதவி என அதன் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. கல்வி உதவியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வடக்கில் வசிக்கும் 25 வறிய மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த மாதம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான உதவியைக் கோருபவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே காணப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, சில பின்தங்கிய கிராமத்தின் பாடசாலை அதிபர்களினாலும், ஆசிரியர்களினாலும், மாணவர்களின் பெற்றோர்களினாலும் மற்றும் கிராமத்தின் தலைவர்களினாலும் மாலைநேர வகுப்புக்களை நடாத்துவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் கொடூரத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள ஆறு மாதங்களுக்கு மேலாகவும் பதுங்கு குழிகளுக்குள் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனால் சிறார்களின் கற்றல் திறன் வெகுவாக குறைவடைந்துள்ளதாக பல வைத்திய நிபுணர்கள் சுட்டிக் காட்டியதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பதுங்கு குழிகளுக்குள் இருந்த போது இடம்பெற்ற கடுமையான தாக்குதல்களின் அதிர்வினாலும், அதி உச்ச பயத்தினாலும் பலர் இன்று மனநோயாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

தற்போது யுத்தம் ஓய்ந்துள்ள நிலையில் காலங்கள் கடந்து செல்ல செல்ல மீண்டும் முன்னர் இருந்தது போன்ற கல்வி வளர்ச்சியினை எட்ட வேண்டியது அவசியமாகும்.

கலாச்சாரத்தின் சீரழிவினால் கல்வியும் பாதிப்படைகின்றது உண்மை என்றாலும், இப்போது அதனை ஆராய்வதை விடுத்து, அணிவதற்கு கூட ஒழுங்கான ஆடைகளற்ற பல பின்தங்கிய கிராமங்களில் வசிக்கும் வறிய மக்கள் எமது புகைப்பட கருவியில் பதிவாகியுள்ளனர். இவ்வாறான கிராமங்களையும் கவனத்தில் எடுத்து அவர்களின் கல்வியிலும் அக்கறை செலுத்த வேண்டியது கல்வியியலாளர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகவுள்ளது. எனினும் இதற்கு வேண்டிய உதவிகள் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பெற வேண்டிய கட்டாயமும் இருக்கின்றது.

முன்னைய காலங்களில் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் சிறுவர் கல்வி தொடர்பாக இலங்கையில் செயற்பட்டு வந்தபோதும் இப்போது அவைகள் முற்றாக தடுக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளன. இதனால் முன்னர் கிடைத்த ஒரு சில உதவிகளைக் கூட பெற முடியாத நிலை தற்போது காணப்படுகின்றது.

இலங்கையில் இலவசமாக கல்வி வழங்கப்படுகிறதென்று சொல்லிக் கொண்டாலும், கல்விச் செலவுக்கே அதிகமான தொகை செலவிடப்படுகின்றது என்பதை மறுக்க முடியாது. வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் வீட்டிலேயே ஆசிரியரை வரவழைத்து கற்கும் போது, ஏழைக் குடும்பத்தில் பிறந்த குழந்தைகள் பாடசாலைக் கல்வியை மட்டுமே நம்பியிருக்கும் நிலை காணப்படுகின்றது. எனினும் அநேக பாடசாலைகளில் உரியவாறு கல்வி போதிக்கப்படுவதில்லை. ஆசிரியர்களின் அசமந்தம், மாணவர்களை மேலதிக வகுப்புக்களுக்குச் செல்வதை தவிர்க்க முடியாததாக்குகின்றது. சாதனைகளைப் புரியும் பல்வேறு மாணவர்கள் வறிய குடும்பத்தில் தான் பிறந்தவர்கள் என்பதை இந்தவேளையில் நாம் நினைவில் கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம்.

மேலதிக மாலை நேர வகுப்புக்களைத் தொடர வேண்டுமானால் போதிய பணவசதி இருக்க வேண்டும். பாடசாலைக்கு சமனான கல்வியே மேலதிக வகுப்புக்களிலும் போதிக்கப்படுவதால், பயிற்சிப் புத்தகங்கள், கையேடுகள், மாலை நேர வகுப்புக்களில் நடாத்தப்படும் பரீட்சைக்கான கட்டணங்கள், வகுப்புக்கான மாதாந்த கட்டணங்கள், அப்பியாச கொப்பிகள், இதர கற்றல் உபகரணங்கள் என செலவு அதிகமாகவே காணப்படுகின்றது. மேற்குறிப்பிடப்பட்டவைகளில் ஏதாவது ஒன்று குறித்த அந்த மாணவனுக்கு கிடைக்காமல் போகுமாயின் மேலதிக வகுப்புக்குச் செல்வதை இடைநிறுத்தவே அவன் எண்ணம் கொள்வான். இதனால் கற்றலில் கவனக் குறைவும் ஏற்படும். மீண்டும் அவனை மேலதிக வகுப்புக்கு அனுப்புவதற்கு பெற்றோர் படாதபாடு படவேண்டியிருக்கும். எனவே மேலதிக வகுப்புக்களாவது இலவசமாக, முறையாக நடத்தப்படுமாயின் சாதிக்கத் துடிக்கின்ற பல்வேறு மாணவர்களின் அறிவுப்பசிக்கு தீனி போடுவதாகவே அது அமையும்.

பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் சிலர் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தருவதனால் உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு சமூகம் தருவதில்லை. மாணவர்களின் ஒழுக்கத்திலும் அதீத அக்கறை செலுத்துவதுவதில்லை. மேலும் விடுமுறைக்கு இடையில் வரும் பாடசாலை நாட்களிலும் அவர்கள் விடுமுறையில் நிற்பது போன்ற செயற்பாடுகள் மாணவர்களின் கல்வியையே பாதிப்படைய செய்கின்றது. இதனை விட பல கிலோ மீற்றர்கள் சென்று கல்வி கற்க வேண்டிய நிலையும் உள்ளது. அன்றாட உணவுக்கே அல்லாடுகின்ற வறுமைப்பட்ட மக்கள் போக்குவரத்துக்காக வேறொரு தொகையை செலவிட வேண்டியுள்ளது. இவ்விதமான ஆள் நடமாட்டமில்லாத பகுதிகளுக்கூடாக தனியாக பெண் பிள்ளைகள் செல்வதும் கூட ஆபத்து நிறைந்ததே. உரிய நேரத்தில் போக்குவரத்து வாகனங்கள் வராததும், உரிய போக்குவரத்து சாதனங்கள் பின் தங்கிய கிராம வாசிகளிடம் காணப்படாமையும் அவர்கள் பிள்ளைகளின் கல்வியை கேள்விக்குறியாக்குவதாகவே உள்ளது.

இலங்கையிலிருந்து பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து வாழ்கின்ற எம்மவர்கள் சிலர் இங்கு வருவது கூட இல்லை. வருகை தந்தாலும் தங்கள் வீடு, நகரங்கள் என செல்வதால் இவ்வாறான பின்தங்கிய கிராமங்களை அறியாமலேயே இருந்து விடுகின்றார்கள். இதற்கு ஒரு சிலர் விதிவிலக்கானவர்கள் என்றே சொல்ல வேண்டும். அவர்களின் சிறு சிறு உதவிகளே இன்று பலரை வாழ வைத்திருக்கிறது எனலாம். ஆடம்பரச் செலவுகளில் இருந்து ஒரு சிறு தொ-கையை பின் தங்கிய கிராமங்களின் அடிப்படைக் கல்விக்கு செலவிட்டால் காலத்தாலும் அழியாத கல்வியைக் கொடுத்ததன் பயனை அவர்கள் அடைந்து கொள்வார்கள் என்பது நிதர்சனமே. அழிக்கப்பட்ட எம் இனம் தலை நிமிர்வோடு வாழ்வதற்கு கல்வி அறிவு அத்தியவசியமான அடிப்படைத் தேவையொன்றாகும்.

அனைவருக்கும் இக் கல்வியானது உரிய முறையில் சென்றடைய மேலதிக வகுப்புக்களும் தற்போதைய கட்டாயத் தேவையாகவுள்ளது.

கல்வியின் மூலம் ஒழுங்கமைக்கப்படும் சமூகம் கலாச்சார சீரழிவிலிருந்தும் தன்னை பாதுகாத்துக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இலண்டன், நம்பிக்கை ஒளியின் உதவி கிராமப்புறங்களில் கல்வி உதவி கோரி மேலதிக வகுப்புக்களை வேண்டி நிற்கும் சமூக ஆர்வலர்களின் வேண்டுகோளை ஏற்று அந்தந்த கிராமங்களில் அடிப்படைக் கல்வியை இலவசமாக போதிக்கும் செயற்பாடு அத்தியவசியமாக தேவைப்படுகின்றது என்பதே ஒட்டுமொத்த கிராமப் புறி மக்களின் கோரிக்கையாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

# ஔவைப்பாட்டி கூறும் வாழ்க்கை நெறிகள்





சென்ற மாத தொடர்ச்சி

**இதன்கருத்து என்னவெனில்: -**
ஒருவர்க்கு நாம் உதவி செய்யும் போது, அதற்கு பிரதிபலனும், நன்றியும் எப்போது கிடைக்கும் என்று கருதி அதனை நாம் செய்யக்கூடாது. எப்படிப்பட்ட நீரை வேர் மூலம் உண்டாலும், நன்கு தளராது வளர்ந்துள்ள தென்னை மர மானது அந்நீரை சுவையான இளநீராக தேங்காய்களூடாக தந்து விடும். அதுபோல ஒருவர்க்கு செய்த சிறு உதவியும் நமக்கு ஒரு காலம் நிச்சயம் நன்மை பயக்கும். இதன்மூலம் பிறருக்கு உதவிபுரிகின்ற நற்பண்பின் சிறப்பை எடுத்துச் சொல்கின்றார். பிறருக்கு உதவிபுரிவது சிறந்த பண்பாகிலும் அதுவும் நல்லவர்களுக்கு செய்யும் பொழுதே நின்று நிலைக்கும். அ·.தல்லாது தீயவர்கட்கு நாம் உதவிபுரிவோமாகில் அது நீர்மேல் எழுதிய எழுத்துப் போல் பலனின்றிப் போய்விடும் என்பதை எமக்கு எடுத்துச்சொல்ல மூதுரையில் மேற்சொன்ன பாடலை அடுத்து வருமாறு பின்வரும் பாடலை அமைத்துள்ள பாங்கானது ஔவையின் புலமைச்சிறப்பை மட்டுமல்ல உதவிபுரிதல் என்னும் உயரிய பண்பால் எத்தகையவர்கள் பலனடைய வேண்டும் என்பதை உதவிபுரிபவருக்கு . முன்னரேயே எச்சரிக்கையூட்டுவதாக அமைகிறது.

**நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்**
**கல்மேல் எழுத்துப்போல் காணுமே**
**அல்லாத ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த**
**உபகாரம் நீர் மேல் எழுத்துக்கு நேர்.**

இவை தவிர நல்வழியில் ஔவை கூறிய ஒரு பாடல் நம்மை சிந்திக்க தூண்டி நாமாகவே உய்த்துணர்ந்து சில நற்பண்புகளை நம்மிடையே வளர்த்துக் கொள்ள தூண்டுதலாக அமைகின்றது. **அப் பாடல்:**

**பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்**
**கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் கூடுவிட்டுங்(கு)**
**ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்**
**பாவிகாள் அந்தப் பணம்.**

இப் பாடலின் மூலம் வெளிப்படையாகவே ஒருவன் தான் கஸ்டப்பட்டு உழைத்த பணத்தை அனுபவியாமல் சேர்த்து வைப்பானாகில் அவன் இறந்தபினர் அதனை யார் யாரோ அனுபவிப்பர். அகவே அப் பணத்தால் உழைத்தவனுக்கு பலனில்லை. எனவே அதன் மூலம் பலன் பெறவேண்டுமாயின் உழைக்கும் பொழுதோ அல்லது உயிருடன் இருக்கும் பொழுதோ நல்ல காரியங்களுக்கு பயன்படுத்துவானாயின் அதனால் அவன் இப்பிறவியில் திருப்த்தியும் மறுபிறவியில் புண்ணியத்தையும் அடையமுடியும் என்பதை சொல்லது சொல்லிச் சென்றுள்ளார் .

மேலும் இப்பாடலுக்குரிய கருத்தைக் ஔவையார் அருளிய கொன்றை வேந்தனில் ஒருவரியில் விளக்கியுள்ளார் . அதவது **'ஈயார் தேட்டைத் ( தேட்டம் - சொத்து ) தீயார் கொள்வர்'** என்பதே அதாகும் . இதே கருத்தமைந்த இன்னுமொரு பாடல் ஒன்றை ஔவையாரின் தனிப் பாடல் வெண்பாவொன்றிலும் காணலாம். அது

**கருங்குளவி சூரைத்தூ றீச்சங் கனிபோல்**
**வருந்தினர்கொன் றீயாதான் வாழ்க்கை அரும்பகலே**
**இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வாரே**
**எச்சோமற் றெச்சோமற் றெச்சு.**

தன்னிடம் இல்லையென்று வருபவர்களுக்கு ஒன்றுமே கொடுத்து உதவாதவன் குளவிக்கூடு, சூரைமுள்ளோடு பழுத்திருக்கும் சூரைப்பழம், கூரான நீண்ட முள்ளுக்கிடையே பழுத்திருக்கும் ஈச்சம்பழம் போன்றவன். அவன் செல்வத்தை அவனுக்குப் பின் வரும் அவனது சந்ததியினர் தான் அனுபவிப்பார்களே தவிர அதனால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை. இப் பாடல்களை தொகுத்து நோக்குகின்ற பொழுது பிறருக்கு கொடுத்துதவுதால் அல்லது இல்லாதவர்களுக்கு நம்மிடையே இருக்கின்ற செல்வத்தை வழங்குவதால் எமக்கு வருகின்ற நன்மையும் திருப்தியும் எத்தகையது என்பதை விளங்கி எமது வாழ்வை வழிப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. மேலும் விதிவசத்தால் தொடர்ந்தும் துன்பம் அல்லது வறுமையில் உழல்கின்ற பொழுது இந்த நிலையும் எம்மைவிட்டு கடந்தது போகும் என்பதைக் காட்ட ஔவை என்ன சொல்கின்றார் என்று பார்போமாகில்

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ
**முட்டமுட்டப் பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கென்னாய்**
**கொஞ்சமே அஞ்சாதே நீ.**

**நெஞ்சமே! பெரும் பஞ்சமே (துன்பம் ) வந்தாலும் அதைக்கண்டு நீ அஞ்சாதே.**

இதுதான் உனக்கு என்று தலையில் எழுதிய சிவன் (இறைவன்) இன்னமும் சாகவில்லை. அவனிடம் உனது துன்பத்தை பாரம் கொடுத்துவிட்டு வைராக்கியத்தோடு இரு. அதாவது "இதுவும் நம்மை விட்டு கடந்துபோகும்" என்ற மனநிலையை நம்மிடையே வளர்த்துக் கொள்ளும் வழிவகையைச் சொல்கின்றார்.

ஔவையார் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாடிய பாடல்கள், நீதி நூல்களில் கூறப்பட்டுள்ள வாழ்க்கை நெறிமுறைகள் இன்றைய காலத்துக்கும் ஒரு மனிதனுடைய வாழ்வை அவன் செம்மையாக அமைக்க எவ்வளவு தூரம் உதவுகின்றது என்பது கண்கூடு. . அப்பாடல்களின் பொருட்சுவையை மட்டும் அனுபவியாது அதன்படி நாமும் ஒழுகி மற்றவர்களும் வாழ வழி சமைப்போமாகில் அதுவே பெரிய வாழ்வியல் நெறியாகும்.

## 7ஆம் பக்க மாத தொடர்ச்சி

அவர் தெளிவுபடுத்தியிருந்தார். அன்று இருந்த இளவட்டங்கள் அனைவருமே இன்று நல்ல நிலைகளில் இருப்பதாகவும் நீதிபதி அவர்கள் பெருமிதம் அடைந்தார்.

எனவே, இவ்விதமான சம்பவங்களை நோக்கும் போது எம் இனத்தின் இறைமையானது மாண்டு விடுமோ? என்று சிந்திக்க தோன்றுகிறது. வீதிகளிலும் தெருக்களிலும் மாத்திரமல்ல பிரச்சனைகள். வீடுகளிலும் தான் என்பதை ஏற்கத் தான் வேண்டும். எமது பிள்ளை எந்த பிழையும் செய்ய மாட்டான் என்று செல்லம் கொடுத்து வளர்ப்பதால், பிள்ளைகள் போதை வஸ்துக்களைப் பயன்படுத்துவது பெற்றோருக்கு தெரியாமலேயே போய்விடுகிறது. சிறு வயதிலேயே இவ்வாறான பழக்க வழக்கங்களினால் பல்வேறு வகையான நோய்களுக்கும் முகம் கொடுக்க நேரிடுகின்றது. சிறுசிறு பிரச்சனைகளுக்கெல்லாம் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடுவதால் பாரிய விளைவுகள் ஏற்பட வழிவகுக்கப்படுகின்றது. பெற்றோர்களும் தங்கள் பிள்ளைக்கு கிரக பலன் சரியில்லை என கோவில் கோவிலாக ஏறி இறங்குவதும் வழமையாகி விட்டது.

வடக்கு-கிழக்கில் போதை வஸ்துக்களின் பாவனை காணப்படுகின்றதே தவிர, அதனை வடக்கு-கிழக்கில் உற்பத்தி செய்வதில்லை. தென்னிலங்கை போதைப் பொருள் வர்த்தகர்களிடமிருந்தே பரிமாறப்படுகிறது. குடிபான வகைகளை விடவும் போதை வஸ்துக்கள் அதீத தாக்கத்தை உண்டு பண்ணக் கூடியது. போதை வஸ்துக்கள் பல்வேறு வகைகளில் காணப்படுவதோடு அதனைப் பயன்படுத்துவதும் இலகு என்பதால் குடிபான வகைக்ளை விட போதை வஸ்துக்களுக்கு அடிமையாகின்ற நிலையே அதிகளவில் காணப்படுகின்றது.

தமிழர் தாயகப் பகுதிகளில் இருக்கும் சமூக ஆர்வலர்களும், நேர்மையான அரசியல் வாதிகளும், காவல் துறையினரும் போதைவஸ்துக்கள் தொடர்பில் கூடிய கவனமெடுக்க வேண்டியது தற்கால தேவையாகவுள்ளது. போதைவஸ்துக்கள் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்குள் உள்வாங்கப் படுவதை முற்றாக தடுக்க வேண்டும். போதைப் பொருள் வர்த்தகர்கள் எவராயினும், அவர்கள் எங்கிருந்தாலும் உடனடியாக கைதுசெய்யப்பட்டு பாரபட்சமின்றி தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக அனைவரும் பேசவே தயங்குகின்ற இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து உரியவர்கள் செயலாற்ற வேண்டியது கட்டாயமாகும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழர்கள் மீது குறிவைத்து மேற்கொள்ளப்படும் இனவழிப்பானது, யுத்தம் முடிவடைந்த பின்னர் இவ்விதமாக அரங்கேறுவதை தொடர்ந்தும் அனுமதிக்காமல் நாங்கள் ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும். போதைவஸ்துக்களின் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை இளம் சமுதாயத்தினர் மத்தியில் எடுத்துச் செல்ல வேண்டும். தலைநிமிர்ந்து தன்னிறைவோடு வாழ வேண்டிய தமிழர்கள் போதை வஸ்துக்களினால் தலைகவிழ்ந்து போகாதபடி அந்நிலையை நாம் அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்க வேண்டும். எம் தலைவிதியை நாமே நிர்ணயிப்பவர்களாக எமது இளம் சமுதாயத்தை இதிலிருந்து மீட்டெடுக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

## வரலாற்று சிறப்பு மிக்க புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்..!



கரைச்சி, புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் வருடந்தோறும் நடைபெறும் பங்குனி உத்தரப் பொங்கல் திருவிழா இந்த வருடமும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கடந்த மாதம் புதன் நடைபெற்ற இந்தப் பொங்கல் விழாவில் இருநூற்றுக்கும் மேற்பட்ட தூக்கு காவடிகள், ஆட்டக் காவடிகள், பாற்செம்புகள் என்பவற்றுடன் இலச்சக்கணகான பக்தர்கள் கலந்துகொண்டு தமது நேர்ததிக் கடன்களை நிறைவேற்றினர்.

இதேவேளை, நேர்த்திக் கடனுக்காக ஆலயத்திற்கு வழங்கப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட ஆடுகள், கோழிகள் என்பன ஏலத்திற்கு விடப்பட்டது. இதன்போது பலர் இவற்றை ஏலத்தில் வாங்குவதற்கு முண்டியடித்துக் கொண்டு நின்றமையை அவதானிக்க முடிந்தது.

அத்துடன், ஏராளமான வியாபார நிலையங்கள் ஆலயச் சூழலைச் சுற்றி அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகளும் களைகட்டியது.

அண்மையில் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் உழவு இயந்திரங்களில் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தனர்.

400 வருடங்களுக்கு முற்பட்ட கால வரலாற்றினைக் கொண்ட இந்த ஆலயத்தில் பொங்கலுக்காக 8 நாட்களுக்கு முன்னராகவே விளக்கு வைக்கின்ற வைபவமும், இந்த நிகழ்வினைத் தொடர்ந்து ஆலயத்தின் பரம்பரைப் பூசகர்கள் பண்டமேற்றும் வண்டியில் சென்று அடியார்களின் நேர்த்திப் பொருட்களை பெற்று வந்து பொங்கல் செய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.






# சாதனைத் தமிழனைக் கண்டு கொள்ள மறந்த தமிழ் சமூகம்!

நாட்டில் பல துறை சார்ந்த திறமையானவர்கள் பலர் இருந்தும் அவர்கள் அந்த துறைகளில் தொடர்ந்தும் பிரகாசிப்பதற்கு வழங்கப்படுகின்ற ஆதரவு என்பது மிக குறைவாகவே உள்ளது. அதனால் பலரும் தமது திறமைகளை மழுங்கடித்து விட்டு காலசூழ் நிலைகளால் வேறு வேலைகளில் ஈடுபடத் தொடங்குகின்றனர். வேறு சிலர் இன்னும் போராடி தமது திறமையால் சாதித்தும் விடுகிறார்கள். இதில் தனது திறமை காரணமாக இன்று வடபகுதியில் பேசப்படும் ஒருவரே குமார் நவநீதன்.

வயது 28. சாதாரண ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தவன். வவுனியா, கூமாங்குளம் கிராமத்தில் வசித்து வருகிறான். தனது 19 ஆவது வயதில் தந்தையை இழந்து தாயின் பராமரிப்பில் வளர்ந்தான். மூன்று சகோதரிகள், ஒரு சகோதரன். மூத்த ஆண்பிள்ளை என்பதால் தாயுடன் இணைந்து குடும்பத்தை பார்க்க வேண்டிய பாரிய பொறுப்பு அவனுக்கிருந்தது. அதனை தட்டிக் கழிக்காது பாதியிலேயே படிப்பை நிறுத்திவிட்டு, கடைகளில் வேலை செய்து குடும்பத்தை பார்த்தான்.

இளமையில் இருந்து விளையாட்டுத் துறையில் அவனுக்கிருந்த ஆர்வத்தை அவன் பயன்படுத்துவதற்கு குடும்ப சூழல் அவனுக்கு இடம் கொடுக்கவில்லை. எப்படியாவது படித்து நல்ல நிலைக்கு வரவேண்டும் என முயன்ற போதும் தந்தையின் நோயும், அவரது மரணமும் அவனை அந்த இலக்கை எட்டவிடவில்லை. அதன்பின் கடைகளில் வேலை செய்து கொண்டு விளையாட்டு பயிற்சிகளிலும் ஈடுபடத் தொடங்கினான். வேலை ஒருபுறம். குடும்பச் சுமை மறுபுறம். இதற்குள் தனது 21 ஆவது வயதில் இருந்து தவறாது காலை 6 மணியில் இருந்து 8 மணிவரை மைதானத்திற்கு சென்று ஓட்டப் பயிற்சியில் ஈடுபட்டு வந்தான். வீட்டில் இருந்து 7.5 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நகரசபை மைதானமே நவநீதனின் பயிற்சிக்களம். கடந்த 7 வருடங்களாக கடும்பயிற்சி. இன்று அவனை சர்வதேச போட்டி ஒன்றுக்கு கொண்டு சென்றுள்ளது.

கடந்த 7 வருடங்களுக்குள் மாகாண மற்றும் தேசிய ரீதியில் பல போட்டிகளில் பங்கு பற்றி பல சாதனைகளைப் படைத்த போதும் அவனை சர்வதேச ரீதியில் கொண்டு செல்வதற்கு எவரும் முன்வரவில்லை. வடமாகாணத்தில் 2010, 2012, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தையும், ஊர்சுற்றும் போட்டியில் நான்கு தடவை முதலாமிடத்தையும் பெற்றிருந்தான் நவநீதன். தேசிய ரீதியில் 2015 ஆம் ஆண்டு மரதன் ஒட்டப் போட்டியில் 42.195 கிலோமீற்றர் தூரத்தை 2 மணித்தியாலம், 40 நிமிடம், 30 செக்கனில் ஓடி முடித்து 9 வது இடத்தைப் பெற்றான். அதே ஆண்டு அனுராதபுரத்தில் இடம்பெற்ற சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் 6வது இடத்தைப் பெற்றிருந்தான். அவன் தனி ஒரு மனிதாக இவ்வாறு சாதிப்பதற்காக மேற்கொண்ட போராட்டங்கள் பல. அவனுக்கு உதவியது அவனது நண்பர்களே. அவர்களின் ஆறுதல் வார்த்தைகளும் அவ்வப் போது அவர்கள் தனிப்பட்ட ரீதியில் வழங்கிய சிறு உதவிகளுமே இன்று அவனை ஒரு சர்வதேச விளையாட்டு வீரனாக வடக்கிற்கு மட்டுமன்றி முழு இலங்கைக்கு அடையாளம் காட்டியுள்ளது. யாரும் அவனுக்கு கைகொடுக்காத நிலையில் அவனது திறமையைக் கண்டு இலங்கை கடற்படையின் விளையாட்டு வீரராக அவனை உள்வாங்கியுள்ளது கடற்படை.

கடந்த 20 ஆம் திகதி தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற 100 கிலோமீற்றர் அஞ்சல் மரதன் ஓட்டப் போட்டியில் இலங்கை சார்பாக பங்கு பற்றிய பண்டார (அனுராதபுரம்), சஜீவ (கண்டி), லக்சிறி (காலி) ஆகியோருடமன் நான்கு பேர் கொண்ட குழாமில் பங்கு பற்றி இரண்டாம் இடத்தை இலங்கை அணி பெற காரணமாக விளங்கியவன் நவநீதன். கலந்து கொண்ட நான்கு பேரில் ஒரே ஒரு தமிழ் வீரர் நவநீதனே. இன்று அவனது குடும்பம் இவனது சாதனையால் மகிழ்ச்சியில் இருந்தாலும், அதனை கொண்டாட முடியாத நிலையில் இருக்கிறது. ஏனெனில் அவனது சாதனைக்கு முன் அங்கு நிற்பது குடும்ப வறுமையே. நவநீதன் அவற்றை தாங்கி அந்த இடர்களுக்குள்ளேயே சாதித்ததை யாரும் மறுத்துவிட முடியாது.

இவனது உழைப்பிலேயே குடும்பம் தங்கியுள்ள நிலையில், விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றுவதற்குச் செல்ல ஆயத்தமாகும் போதும் கூட அதற்கு பணம் இல்லாது தவிர்ந்திருந்தான். வடமாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சர்க. குருகுலராஜா, மத்திய விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் ஹரிஸ் ஆகியோரிடம் உதவி வழங்குமாறு வவுனியாவில் இடம்பெற்ற விளையாட்டுத் துறை கூட்டத்தில் விளையாட்டு வீரர்கள் நேரடியாக கோரப்பட்டும், கடிதமும் வழங்கப்பட்ட போதும் அவன் செல்வதற்கு எந்த உதவியும் கிட்டவில்லை. விளையாட்டுத் துறை பிரதி அமைச்சர் ஹரிஸ் விமான ரிக்கெற்றுக்களை ஏற்பாடு செய்ய முடியும் என அந்த கூட்டத்தில் பகிரங்கமாக தெரிவித்த போதும் அது கூட நிறைவேற்றப்படவில்லை.

இறுதியில் அவனும், அவனது நண்பர்களும் இணைந்து வவுனியாவில் நல்லுள்ளம் கொண்ட சிலரிடம் பெற்ற சிறு உதவிகளைக் கொண்டே விமானத் டிக்கெற் தொடக்கம் ஏனைய செலவு-களையும் ஈடு செய்து தாய்லாந்து புறப்பட்டான்.

தாயலாந்தின் பாங்கொக் நகரில் தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கென்யா, கொங்கொங் உள்ளிட்ட 30 நாடுகள் பங்குபற்றிய இந்த 100கிலோ மீற்றர் தூரம் வரையிலான அஞ்சல் மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றினான். இதில் பங்கு பற்றி இலங்கை அணி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை பெற்றுக் கொள்ள காரணம் இவனே. இன்று தென்னிலங்கையில் வெற்றியுடன் வந்த அந்த வீரர்கள் அவர்களது பகுதிகளில் கௌரவிக்கப்பட்ட போதும், வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் மக்களுக்கு பெருமை தந்த இந்த வீரனுக்கு மட்டும் எந்தவித வரவேற்பும் இன்றி கடந்த 22 ஆம் திகதி புகையிரதத்தில் வந்திறங்கி வீடு சென்றுள்ளான். அண்மையில் கூட சார்க் நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற விளையாட்டு போட்டியில் வடக்கின் வவுனியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய இரு பெரும்பான்மை சகோதரர்கள் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்று வெற்றி பெற்றிருந்தனர். அவர்கள் இருவரையும் வாகனம் ஒன்றில் வவுனியா நகரில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மாவட்ட செயலகத்தில் பாரிய அளவில் கௌரவிப்பும் வழங்கப்பட்டது. ஆனால் நவநீதனுக்கு மட்டும் அந்த கொடுப்பனவு இல்லை. காரணம் என்ன? ஏழ்மையா..? அல்லது தமிழன் என்பதலா? இல்லை எமது சமூகத்தின் அக்கறையற்ற தன்மையா? சிந்திக்க வேண்டிய விடயமிது.

இவ்வாறான வீரர்கள் ஊக்குவிக்கப்படும் போதே இனிவரும் காலங்களில் இன்னும் பல வீரர்கள்களை உருவாக்க முடியும். இலங்கையின் தேசிய கிரிக்கெட் அணியில் ஒரு தமிழனுக்கும் வாய்ப்பு கொடுக்கப்ப்வில்லை என பலரும் குறை கூறுகிறார்கள். ஆனால் தேசிய அணியில் இருந்து சாதிக்கும் இந்த வீரர்களை மறந்து விடுகிறார்கள். வடக்கில் இளைஞர்கள் தவறாக செல்கிறார்கள். பிழையாக வழிநடத்தப்படுகிறார்கள் எனப் பலரும் வெட்டி அறிக்கை விடுகிறார்கள். அப்படியாயின் இவ்வாறு சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு இவர்களால் என்ன செய்ய முடிகிறது எனபதே இப்போதுள்ள கேள்வி..







# அடிப்படை வசதிகளின்றி வாழும் நோர்வூட் மேற்பிரிவு மக்களின் அவலம்..!

இந்த நவீன காலத்திலும் அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வரும் சமூகத்தில் எதிர்காலத்தை தீர்மானிப்பது எவ்வாறு என்ற மனத்தாக்கத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள் நோர்வூட் மேற்பிரிவு தோட்ட மக்கள்.

அத்தோடு பருவம் அடைந்த பெண் பிள்ளைகளை பராமரிக்கும் சூழ்நிலைகளை இழந்துள்ள நிலையில் திருமண வயதுக்குட்பட்ட ஆண், பெண் பிள்ளைகளுக்கு உரிய நேரத்தில் திருமண வைபவங்களை நிகழ்த்த முடியாத அவல நிலைக்கு தள்ளிவிடப்பட்டுள்ளனர்.

இந்த தோட்டம் நோர்வூட் நகரத்திலிருந்து 03 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. இவர்கள் வாழும் குடியிருப்புகள் வெள்ளையர்களின் காலத்தில் கட்டப்பட்ட குடியிருப்புகளாக இருக்கின்றன.

பிள்ளைகள் தனியாக இருக்கின்ற வேளைகளில் இடிந்து விழுந்தால் எங்களது பிள்ளைகளை பறிகொடுக்க வேண்டிய நிலையேற்படும். இந்த தோட்டத்தில் பாதிக்கப்பட்ட இந்த குடியிருப்பு தொகுதியில் பனிரெண்டு காம்பராக்களிலும் பனிரெண்டு குடும்பங்களை சேர்ந்த 60 பேர் வசித்து வருகின்றோம் என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தோட்டத்தின் பாதிக்கப்பட்ட இந்த பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகள் பாதை, குடிநீர், வீடுகள் பற்றாக்குறை, வடிக்கால்கள், மலசலகூடம் என சுகாதார அடிப்படை வசதிகளை எவரும் செய்து கொடுக்காத நிலைகளில் மிகவும் மோசமான நிலையில் தங்களது வாழ்க்கையை நகர்த்துவதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.





இந்த நவீன காலத்தில் மின்சார வசதிகள் கூட இல்லாமல் குப்பி விளக்குகளை வைத்து கல்வி கற்கும் மாணவர்களும் இங்கு இருக்கின்றார்கள்.

எனவே நாங்கள் படும் வேதனைகளை புரிந்து கொண்டு மலையக அரசியல்வாதிகள் மௌனம் சாதிக்காமல் இப்பிரச்சினைக்கு விடிவினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது எங்களின் கோரிக்கையாகும்.

தாங்கள் படும் வேதனைகளை எங்களின் பிள்ளைகளும் படக்கூடாது என நினைத்தாலும் இத்தோட்டத்தில் தற்போது காணப்படும் நிலைமையை பார்க்கும்போது எங்களது பிள்ளைகளும் எங்களை போன்று வாழ வேண்டிய சூழ்நிலையே அதிகமாகவுள்ளது. இப்பாதை போக்குவரத்து வசதிக்கு உகந்ததாக இல்லை. மிகவும் மோசமான நிலையில் உடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இப்பாதையினை செப்பனிட்டுதர எந்தவொரு அரசியல்வாதிகளும் வரவில்லை.

எத்தனை தொழிற்சங்கங்கள் இருந்தபோதிலும் எங்களுடைய பிரச்சினைக்கு தீர்வு கிட்டியதாக இல்லை என இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே மலையக உறவுகளுக்கும் புலம் பெயர்ந்த உறவுகளின் அரவணைப்பும் உதவிகளும் பெருமளவில் தேவைப்படுகின்றன வடக்கில் அபிவிரித்திகள் நடந்தாலும் மலையகத் தமிழர்களின் வாழ்வு இன்றும் சோகம் நிறைந்ததாகவே உள்ளது.



# இறுதிக்கட்ட யுத்தத்தில் இழந்தது மீண்டும் கிடைத்ததா?

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்று ஏழு வருடங்கள் கடக்கப் போகின்றது. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் இடம்பெற்ற கடும் யுத்தங்கள் இறுதியில் முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்றது. ஆரம்பத்தில் அகிம்சை வழியில் இடம்பெற்ற போராட்டங்கள் பிற்பாடு ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. அன்று தொட்டு இன்றுவரை யுத்தம் இடம்பெற்ற காலங்களும் அதிகம். அதன் மூலம் காவு கொள்ளப்பட்ட உயிர்களும், உடமைகளும் இன்னும் அதிகம். கடத்தப்பட்டு காணாமல் போனவர்கள் இன்னமும் கண்டு பிடிக்கப்படாதது மற்றொரு புறம். காலம் காலமாக இடம்பெற்ற தமிழ் இனத்துக்கு எதிரான இனப்படு கொலை இறுதியில் ஏராளம் உயிர்களைக் காவு கொண்டு முடிவுக்கு வந்தது. இருந்தும் ஈழத்தில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டம் மட்டுமே மௌனிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறக்கமுடியாது.

யுத்தம் முடிவடைந்து எஞ்சிய உயிர்கள் மாத்திரம் உணர்வுகளற்ற வெறும் ஜடங்களாக இராணுவத்தின் பிரதேசத்துக்குள் உள்வாங்கப்பட்டனர். யுத்தத்தின் கொடூரத்தினால் பாதிக்கப்பட்டு தமது சொந்தங்களை இழந்து பரிதவித்த உறவுகள் இராணுவத்தினரால் மனிதாபிமானம் அற்ற முறையில் நடத்தப்பட்ட விதங்களை எண்ணும் போது இன்றும் விழிகளில் நீர் வழிந்தோடுகின்றது. நாளாந்த உணவுத் தேவைக்கும், குடிநீருக்கும் உடைகளிற்கும் யாரிடமாவது கையேந்தும் நிலையே முகாமில் காணப்பட்டது.

யுத்தத்தை முன்னின்று நடத்தியவர்கள் இன்று ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதுமல்லாமல் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பெயரில் சில முக்கிய புள்ளிகள் கைதுசெய்யப்பட்டும் இன்னும் பல முக்கிய புள்ளிகள் எந்நேரமும் கைதுசெய்யப்படலாம் என்னும் நிலையிலும் இருக்கின்றனர். கைது செய்பவர்கள் மற்றும் கைது செய்யப்படுபவர்கள் அனைவருமே பெரும்பான்மையினர் என்று தங்களைச் சொல்லிக் கொள்பவர்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது. யுத்தத்தில் பங்கெடுத்த சிலர் தற்போதைய ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் நல்லிணக்கம் என்கின்ற போர்வையில் தமிழர்களுக்கான தீர்வை தேடுகின்றவர்களைப் போல் தங்களைக் காட்டிக் கொள்கிறவர்களாகவே காணப்படுகின்றார்கள். யுத்தத்தில் எம் மக்கள் இழந்ததை போல் இல்லாவிட்டாலும் எதோ ஒரு வகையில் பதவிகளை இழந்து கடந்தகால ஆட்சியாளர்கள் ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்கள் என்றால் அது அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பாகத்தான் தோன்றும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையிலிருந்து முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் கூறிய பிற்பாடு பல பாரதூரமான கொலைகள் மற்றும் கொள்ளைகள் அரங்கேறின. குறிப்பாக புங்குடுதீவு மாணவி வித்யாவின் கூட்டு வன்புணர்வுக் கொலை நாட்டையே உலுக்கியது. அதனைத் தொடர்ந்து அண்மையில் வவுனியாவைச் சேர்ந்த ஹரிஸ்ணவி எனும் மாணவச் சிறுமியின் கொலை என்பன நடந்தேறியதுமல்லாமல் பல அராஜகங்களும், அடக்குமுறைகளும், அடாவடித்தனங்களும் தலை தூக்கியிமிருந்தன. இவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்தேறிய பின்னர் ஊடகங்களில் வெளிவந்த கேலிச் சித்திரங்கள் அனைவரையும் கொஞ்சம் ஆழமாக சிந்திக்க வைத்தது என்றால் மிகையில்லை. அன்று புலிக்குப் பின்னால் பெண்கள் பயமின்றி இருப்பதைப் போலவும் தற்போது புலி இல்லாத நிலையில் பெண்களை ஓநாய்கள் கடித்துக் குதறுவதைப் போலவும் அக் கேலிச் சித்திரங்கள் சித்திகரிக்கப்பட்டிருக்கின்றன. இதனை நோக்கும் போது எம் மக்களின் ஆதங்கத்தை ஊடகங்கள் இவ்விதமான கேலிச்சித்திரங்கள் மூலமாக வெளிப்படுத்துவதுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது. பல்வேறு இடங்களிலும் இருந்து இடம்பெயர்ந்து, வந்தாரை வாழவைக்கும் வன்னி மண்ணில் வாழ்ந்த எம் உறவுகள் குடிசைகளிலும் ஓலைக்கொட்டில்களிலும் இருந்தாலும் நிம்மதியோடு இருந்தார்கள். ஆனால் இன்று, இருந்த நகைகளை விற்று அரைகுறையாக கல் வீடுகள் கட்டினாலும் சிறிதளவேனும் நிம்மதியைக் காண முடியவில்லை. அத்தோடு அன்று கைப்பேசியின் பாவனையே என்னவென்று தெரியாது முழுமூச்சாய் கல்வியில் நிலைத்திருந்த எம் இளம் சமுதாயம் இன்று, கையும் கைப்பேசியுமாக அலைவதும், அதில் மட்டுமே ஒன்றித்திருப்பதும் அவர்களை மட்டும் பாதிக்கவில்லை. மாறாக அவர்கள் வாழ்வை கேள்விக்குறியாக்கி பெற்றோரின் கனவுகளையும் சிதைப்பதாகவே இருக்கின்றது. "அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பதைப் போல அன்று அனைத்தும் அளவோடு இருந்த காரணத்தால் முழுமையான கலாச்சாரம் மிக்க சமுதாயத்தை நோக்கிய கண்கள் இன்று கண்டதையும் காணும் அவலநிலைக்கு தள்ளப்பட்டிருகிறது.


எங்கள் பாரம்பரிய மண்ணையும், மண்ணின் மக்களையும், மண்ணின் இறைமையையும் பேணிக் காக்கவென்று எம் உயினும் மேலான ஆயிரக்கணக்கான உயிர்களை தியாகம் செய்திருக்கின்றோம். இவைகளெல்லாம் திருமப் பெற கூடியது தானா? காரணம் இல்லாமல் பலர் காணாமல் போயும் இன்றுவரை அவர்களின் நிலையேதும் தெரியாமல் வீதிகளிலும் அங்கும் இங்குமாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் அவர்களின் உறவுகளுக்கு அரசாங்கம் எதை தான் கொடுக்க போகின்றது? காலம் தாழ்த்தி அரசாங்கம் அவர்களுக்கு மரண சான்றிதழ்களை வழங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. உடன் பிறப்புக்களை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு அரசாங்கத்தின் பதில்கள் எதுவும் அவர்களை சமாதானப்படுத்திட இயலாது என்பதே நிஜமாகும்.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுக்கெல்லாம் முக்கிய காரணம் அன்று இருந்தவர்கள் இன்று இல்லாததே! பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் ஏனையவர்களுக்கு பாடமாக இருக்க வேண்டும். காலம் தாழ்த்தாது தண்டனைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும். அப்போதாவது குற்றச் செயல்கள் குறையுமா? என்று தண்டனைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் போது தான் அறிய முடியும்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் எம் மக்கள் இழந்ததை திருப்பப் பெற்றார்களா? என்றால் அது கேள்விக்குறிதான். இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரம் பெற்று காணப்பட்ட 2009ன் இந்தக் காலப்பகுதியில் களமாடி வீழ்ந்த மாவீரர்களும், யுத்தத்தின் போது அப்பாவித்தனமாக கொல்லப்பட்ட உறவுகள் மீதும் நாம் ஒவ்வொருவரும் சபதமெடுக்க வேண்டும். இழந்தது இழந்ததாகவே இருந்தாலும், இனியும் தொடரும் அராஜகங்களுக்கு இடமளியோம் என்று. அப்போது தான் எம்மவர்களின் ஆத்மா சந்தியடையும் !!!

# நவீன வசதி கொண்ட 65,000 வீட்டுத் திட்டத்தில் சர்ச்சைகள் தீர்க்கப்பட வேண்டும்!

## வடமாகாண புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம்



## நம்பிக்கை ஒளியின் விசேட நேர்காணல்

-கே.ருபன்-

யுத்தம் முடிவடைந்து 7 வருடங்கள் கடந்து விட்ட போதும் வடக்கில் இன்றும் அவலநிலை தொடர்கிறது. மீள்குடியேற்றம், பொருளாதாரம், வீட்டுத்திட்டம், வேலைவாய்ப்பு என தினமும் பலர் அலைந்து திரிவதையும், காணாமல் போனோர், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை என தினமும் போராடுவதையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. இன்னும் சில குடும்பங்கள் ஒரு நேர வயிற்றுப் பசியைப் போக்கி வாழ்வதற்காக போராடுவதையும் பார்க்கின்றோம். முன்னைய அரசாங்கத்தால் தான் நன்மை கிடைக்கவில்லை என்ற ஏக்கத்தில் கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதி இந்த நாட்டில் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னராவது விடிவு கிடைக்கும் என வடக்கு மக்கள் நம்பியிருந்த நிலையில் அவை இன்று கானல் நீராகியுள்ளதையே பல சம்பவங்கள் கோடிட்டு காட்டி நிற்கின்றன..

இந்நிலையில் வடக்கு, கிழக்கு பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்காக 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான பத்தாயிரம் வீடுகளையும், நவீன முறையிலான 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான 65,000 புதிய வீட்டுதிட்டங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ் வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகளும் தற்போது ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலை காணப்படுகின்றது. இதன்காரணமாக வடமாகாண புனர்வாழ்வு அமைச்சர் தற்போதைய மீள்குடியேற்ற, வீட்டுத்திட்ட நிலமைகள் தொடர்பாக நம்பிக்கை ஒளிக்கு வழங்கிய விசேட பேட்டியே இது

**கேள்வி: யுத்தம் முடிவடைந்து 7 வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னும் பலர் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலை தொடர்கிறது. தற்போது வடக்கின் மீள்குடியேற்றம் எவ்வாறு உள்ளது?**

**பதில்:** அண்மையில் வடக்கு மாகாண மீள்குடியேற்றம் தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசியிருந்தோம். வடக்கின் 5 மாவட்டங்களிலும் அரச அதிபருடன் இணைந்து அது தொடர்பான தகவல்களை பெற்றிருந்தோம். அந்த வகையில் வடக்கில் இதுவரை ஒரு இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து 181 குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து இலட்சத்து இருபத்து நான்காயிரத்து 944 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதில் யாழ்ப்பாணத்தில் முப்பத்தொராயிரத்து 845 குடும்பம், மன்னாரில் இருபத்தாறாயிரத்து 390 குடும்பம், வவுனியாவில் பதினாறாயிரத்து 862 குடும்பம், கிளிநொச்சியில் நாற்பத்தொராயிரத்து 862 குடும்பம், முல்லைத்தீவில் நாற்பத்தொராயிரத்து 322 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

இவை அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையானது. இவை தவிர மீள்குடியேற்றப்படவுள்ளவர்களும் தற்போது இருக்கின்றார்கள். அதில் இலங்கையில் தற்போது முகாம்களில் ஆயிரத்து 608 குடும்பங்களைச் சேர்ந்த ஐயாயிரத்து 732 பேர் வாழ்கின்றார்கள். அதில் யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 318 குடும்பங்களைச் சேர்ந்த நான்காயிரத்து 737பேர், வவுனியா மாவட்டத்தில் 290 குடும்பங்களைச் சேர்ந்த 995 பேர் வாழ்வதாகவும் தகவல்கள் இருக்கிறது. அதேமாதிரி தான் உறவினர்கள், நண்பர்களுடன் வாழும் குடும்பங்களும் கணிசமான எண்ணைகையில் இருக்கிறார்கள். மொத்தமாக பதினொராயிரத்து 73 குடும்பங்களைச் சேர்ந்த முப்பத்தெட்டாயிரத்து 283 பேர் இவ்வாறு இருக்கின்றார்கள். ஆகவே, மீள்குடியேற்றப்பட வேண்டிய பன்னிராயிரத்து 681 குடும்பங்களைச் சேர்ந்த நாற்பத்து நான்காயிரத்து 15 பேர் இன்னும் மீள்குடியேற்றப்பட இருக்கிறார்கள். இதில் மீள்குடியேற்றம் என்று சொல்லுகின்ற போது உட்கட்டுமான வசதி, அடிப்படை சுகாதார சேவை, கல்வி, அவர்களுக்கான வேலைவாய்ப்பு, உள்ளூர் வீதிகள், பாதுகாப்பு என பல அடிப்படை தேவைகள் இருக்கின்றது. 7 வருடம் சென்ற நிலையிலும் இன்று பலர் தமது கிராமங்களுக்கு சென்றிருந்தாலும் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலேயே வாழ்கின்றனர்.

**கேள்வி: புதிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும் வடக்கில் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் உள்ளன. இது தொடர்பில் ஏதாவது நடவடிக்கைள் எடுக்கப்பட்டு வருகின்றதா?**

**பதில்:** ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் சில முன்னேற்றகரமான நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளது என்று தான் நாம் கருதவேண்டும். ஆனால் நாங்கள் எதிர்பார்த்த அந்த வேகம் இந்த ஆட்சி மாற்றம் வந்த பின்னர் இல்லை என்பது மிகவும் கசப்பான உண்மை. இந்த ஆட்சி மாற்றம் வந்த பிறகு குறிப்பாக யாழ்ப்பாணம் வலிவடக்கில் கணிசமாக காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இன்னும் நிறையக் காணி விடுவிக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. போன வாரம் கூட கோப்பாய், தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 702 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டது. அந்த விடுவிப்பின் போது ஜனாதிபதி அவர்கள் தான் உறுதியளித்த படி காணிகளை விடுவிப்பதாகவும் இன்னும் 3 மாத காலப்பகுதிக்குள் அவை விடுவிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார். அதனால் அதற்குரிய நடவடிக்கையை அவர் எடுப்பார் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் இந்த அகதி முகாம்களில் வாழும் மக்களின் எண்ணிக்கை குறையாமல் இருக்கிறது. உயர் பாதுகாப்பு வலயம் என்று இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் வாழ வேண்டிய மக்களே முகாம்களில் வாழ்கின்றார்கள். அதனால் இந்த அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயம் என வைத்திருக்கும் காணிகளை விடுவித்தால் இந்த முகாம்கள் இல்லாமல் போய்விடும் என்பதே உண்மையான நிலைப்பாடு.

**கேள்வி: புதிதாக தற்போது வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தின் பயனாளிகள் தெரிவு புள்ளியிடலில் கூட யுத்தால் பாதிப்படைந்த சிலர் பாதிப்படைய வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. அதன் உண்மை நிலை என்ன?**

**பதில்:** கடந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்ட இந்தியன் வீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெற்றதனையும், வீடுகள் உள்ளவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டதனையும், சிலருக்கு இரண்டு வீடுகள் இருந்ததினையும் நாங்களும் பார்த்திருக்கின்றோம். அவ்வாறு வழங்கப்பட்ட வீடுகளில் பல வீடுகள் எவரும் குடியமராத நிலையில் பூட்டப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில் எந்தவொரு வீடும் இல்லாத நிறைய பேர் வேறு இடங்களில் தற்போதும் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் புதிய அரசாங்கத்தினுடைய மீள்குடியேற்ற அமைச்சு அறிவித்துள்ள வீட்டுத் திட்டத்திற்குரிய புள்ளி முன்னைய இந்திய அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்கான புள்ளி அடிப்படையில் பார்கின்ற போது ஒரு முன்னேற்றகரமானது என நான் தனிப்பட்ட ரீதியில் பார்க்கின்றேன். ஏனென்றால் இந்த வீட்டுத்திட்டத்தில் பல வருடங்களுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அவர்களது படிப்படையான பிள்ளைகளது தலைமுறைக் குடும்பங்கள் தொடர்பாகவும் சொல்லியிருக்கிறார்கள். இந்திய வீட்டுத்திட்டத்தில் வீட்டு அங்கத்தவர் எண்ணிக்கை, வயது என்ற பல விடயங்கள் பார்க்கப்பட்டது. ஆனால், தற்போதைய முறையில் வீட்டில் ஒருவர் இருந்தால் கூட வீட்டை பெற முடியும். அதேமாதிரி குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, பொருளாதார நிலமை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், பெற்றோர் இல்லாத குடும்பங்கள், விசேட தேவைக்குட்பட்ட குடும்பங்கள், காணாமல் போனவர்களது குடும்பங்கள், போரில் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள், புனர்வாழ்வு பெற்றவர்கள் என அவர்களுக்கும் தனித்துவமான புள்ளிகள் வழங்கப்படுகிறது. ஆகையால் எமது சமூகத்தில் அதி கூடிய கவனம் தேவைப்படுகின்ற குடும்பங்களுக்கு ஓரளவேனும் இதன் மூலம் வீடு கிடைக்க வாய்ப்புள்ளது என்பது ஒரு சந்தோசமான விடயம்.

**கேள்வி: வடக்கில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியவர்களாக எவ்வளவு பேர் அளவில் இருக்கின்றார்கள்?**

**பதில்:** வடக்கு மாகாணத்தில் மாத்திரம் நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட விசேட தேவைக்குட்பட்டோர், நாற்பத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட விதவைக் குடும்பங்கள், தாய்- தந்தை இருவரையும் இழந்த பிள்ளைகள், பிள்ளைகள் அனைவரையும் இழந்த பெற்றோர், புனர்வாழ்வு பெற்ற பதினைந்தாயிரம் முன்னாள் போராளிகள், ஏனையவர்களில் கவனிப்பு தேவையான பல முதியோர்கள் இருக்கின்றார்கள். இப்படியாக நாம் பார்த்தால் எமது மாகாணத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்பட்ட மக்கள் அதிக கவனம் தேவைப்படும் மக்களாகத் தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்த வீட்டுத்திட்ட முறையில் ஓரளவேனும் தீர்வு கிடைக்கும் என நம்புக்கின்றேன்.

**கேள்வி: 65,000 வீட்டுத் திட்டத்தின் கீழான புதிய வீட்டுத்திட்ட விண்ணப்பங்களை கிராம சேவகர், பிரதேச செயலக உறுப்படுத்தலுடன் மீள்குடியேற்ற அமைச்சுக்கு அனுப்புமாறு பத்திரிகைகளில் விளம்பரங்கள் வருகின்றது. இந்நிலையில் அமைச்சு நேரடியாக பரிசீலிப்பதால் அரசியல் தலையீடுகள் இருக்க வாய்ப்புக்கள் இருக்கிறதே?**

**பதில்:** நான் அப்படி நடக்கும் என நம்பவில்லை. நீங்கள் கூறியபடி கிராம

14ம் பக்க தொடர்ச்சி

அலுவலர் உறுதிப்படுத்தி பிரதேச செயலகம் ஊடாக மீள்குடியேற்ற அமைச்சுக்கு அனுப்ப வேண்டும் என்ற நடமுறை தான் தற்போது உள்ளது. இதில் அரசியல் தலையீடு இருக்கும் என்றால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த மாகாண சபையின் பங்கு என்ன?, முன்னைய ஆட்சியைப் போன்று இந்த ஆட்சியிலும் தமது மக்களது தேவைகள், உரிமைகள் தொடர்பாக பேசாது பார்வையாளராகத் தான் மகாகாண சபை இருக்க வேண்டும் என இந்த அரசு விரும்புகின்றதா என்ற ஒரு கேள்வி எழுகின்றது. இதனால் தான் நாம் மத்திய மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் அவர்களிடம் போய் மீள்குடியேற்றம் தொடர்பில் பேசியிருந்தேன். அவர்கள் சில வேலைத்திட்டங்களை மாகாண சபையுடன் இணைந்து செய்வதற்கு கொள்கை ரீதியாக உடன்பட்டுள்ளதுடன், அதற்காக சில கட்டமைப்புக்களை உருவாக்கி நீதியான முறையில் வீட்டுத்திட்டத்தை வழங்க வேண்டும் என கரிசனை கொண்டுள்ளார். அதில் நாம் ஒரு இணக்கத்திற்கு வந்திருந்தோம். 5 மாவட்டத்திலும் வீட்டுத்திட்டம் தொடர்பாக ஒரு குழுவை அமைப்பது என்றும் அதில் மாகாண புனர்வாழ்வு அமைச்சின் பிரதிநிதிகள், மத்திய மீள்குடியேற்ற அமைச்சின் பிரதிநிதிகள், மாவட்ட அரச அதிபரின் பிரதிநிதிகள் ஆகிய மூன்று பிரதிநிதிகளும் சேர்ந்து இந்த பயனாளிகள் தொடபில் பரிசீலிப்பதாகவும், இந்த வீட்டுத்திட்டத்தில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக யாராவது கருதினால் இந்தக் குழுவிடம் முறையிட கால அவகாசமும் வழங்கப்படவுள்ளது. அந்த விசாரணைகள் முடிந்த பின்னரே இந்த வீட்டுதிட்டம் வழங்கப்படவுள்ளது. இது வெகுவிரைவில் நடைமுறைக்கு வரும். அப்படி நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நாம் தொடர்ந்தும் இருக்கின்றோம். ஏனென்றால் இந்த நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லுகின்ற இந்த அரசாங்கத்தை கொண்டு வருவதற்கு இந்த வடக்கு மாகாண மக்கள் தமது பூரண பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். இந்த அரசாங்கத்தில் அவர்கள் தற்போதும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீண் போகாமல் இருக்க வேண்டுமானால் வடக்கில் இடம்பெறும் அனைத்து திட்டங்களும் மக்கள் நலனை முன்னுறுத்தி மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம் என்ற வேறுபாடு இல்லாது இருபகுதியும் சேர்ந்து மேற்கொள்ள வேண்டும். அப்படி செய்யும் திட்டங்கள் தான் வெற்றி பெறும். அந்த அடிப்படையில் இந்த மீள்குடியேற்ற நடவடிக்கையில் மத்திய அரசாங்கம் முன்னுதாரமாக நடக்கும் என நம்புவதுடன், அவ்வாறு நடந்தால் எந்த பிரச்சனையும் வராது என கருதுகின்றேன்.

**கேள்வி: வடமாகாண மீள்குடியேற்றம் தொடர்பில் 5 மாவட்டங்களையும் உள்ளடக்கி தமது புனர்வாழ்வு அமைச்சினால் கொள்கை வகுக்கப்படுவதாக செய்திகள் வந்தன. அந்த வடமாகாண கொள்கையுடன் ஒத்துப் போகும் வகையிலா தற்போதைய வீட்டுத் திட்டம் வழங்கப்படுகின்றது?**

**பதில்:** நாங்கள் வடமாகாணத்திற்கான மீள்குடியேற்ற கொள்கை ஒன்றை தற்போது தான் தயாரித்து வருகின்றோம். அது இன்னும் வெளியிடப்படவில்லை. ஏனெனில் அது சாதாரணமாக இரண்டு பேர் இருந்து எழுதும் கொள்கையாக இருக்கக்கூடாது. அதில் மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும். உண்மையான கருத்துக்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் இந்த துறைசார் குழு ஒன்றை உருவாக்கி அதனை செய்து வருகின்றோம். அதேநேரம் மத்திய அரசாங்கமும் இந்த நாட்டிற்குரிய மீள்குடியேற்ற கொள்கை ஒன்றை தயாரிக்கிறது. அவர்களுடைய கொள்கையும் வெளியிடப்படவில்லை. அந்த கொள்கையின் முன்வரைவு எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இந்த கொள்கை தொடர்பில் இந்த மாத இறுதியில் கொழும்பில் உயர்மட்ட கூட்டம் நடைபெறவுள்ளது. நாங்கள் அந்த உயர்மட்ட கூட்டத்தில் மத்திய அரசின் அந்த மீள்குடியேற்ற கொள்கையில் உள்ள சாதக பாதகங்களை வடமாகாண சபை என்ற அடிப்படையில் சொல்ல சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதன்போது எமது கரிசனையை நாங்கள் சொல்லுவோம். அதேமாதிரியாக வடமாகாணத்திற்கான மீள்குடியேற்ற கொள்கையையும் சமர்ப்பிக்க இருக்கிறோம். இரு மீள்குடியேற்ற கொள்கையும் இன்னும் வெளியாகவில்லை. அதற்குள் இந்த வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்த கொள்கை வந்த பின்னர் சிறந்ததொரு மீள்குடியேற்றத்தை அல்லது நியாயமான மீள்குடியேற்றத்தை வழங்க முடியும்.

**கேள்வி: தற்போது வடக்கில் அமைக்கப்படவுள்ள 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத்திட்டம் எமது காலநிலைக்கு பொருத்தமானதில்லை என வடமாகாண முதலமைச்சர் கூறியுள்ளார். சம்மந்தப்பட்ட வடக்கின் அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

**பதில்:** நான் அந்த வீட்டைச் சென்று பார்த்தேன். அதில் பலருக்கும் பலவ-தமான சந்தேகங்கள் இருப்பது இயற்கையானக விடயம். இதுவரையில் வடக்கிலோ, கிழக்கிலோ இவ்வாறான வீடு வழங்கப்படவில்லை. இதனால் பல சந்தேகங்கள் எல்லா மட்டத்திலும் இருக்கிறது. பிரயோசனமற்றது, இயற்கைக்குப் பொருத்தமானதா?, எவ்வளவு காலம் நிலைத்திருக்கும் என்ற மாதிரியான கருத்துக்கள் இருக்கின்றன. வடமாகாண முதலமைச்சர் அவர்கள் இது தொடர்பில் தனது கருத்தை தெரிவித்திருந்தார். இதேபோல் அன்று நடந்த கூட்டத்தில் கௌரவ மீள்குடியேற்ற அமைச்சர் அவர்களும் இந்த வீடு தொடர்பான தன்னுடைய கருத்துக்களை அங்கு தெரிவித்திருந்தார். ஆனால் எங்களுடைய ஜனாதிபதி சொன்ன விடயத்தையே நானும் சொல்கின்றேன். என்னவென்றால் அமைச்சர்களோ, அதிகாரிகளோ அந்த வீட்டில் வாழப்போவதில்லை. அந்த வீட்டில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் மீள்குடியேறும் மக்களே வாழப் போகிறார்கள். மக்கள் அந்த வீடு தமக்கு பொருத்தமானதா, இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டும். மக்களுடைய கருத்தை அரசாங்கம் கட்டாயம் அறிய வேண்டும். அதன் அடிப்படையில் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் பொதுவாக இந்த வீடு பொருத்தமானதா என்ற சந்தேகம் இருக்கின்றது. இந்த வீட்டை பின்னர் பெருபிக்க முடியாத நிலை வரும் என்று கூட மக்கள் என்னிடம் சொன்னார்கள். எவ்வளவு காலம் இருக்கும் என குழப்பம் இருக்கிறது. இதனால் இந்த சந்தேகங்களை மத்திய மீள்குடியேற்ற அமைச்சு தீர்க்க வேண்டும். அவர்கள் இது தொடர்பான அறிவைக் கொண்டிருப்பார்கள் என கருதுகிறேன். ஆகவே ஜனாதிபதி கூறுவது போன்று மக்கள் வாழும் வீடுகள் அவை. அது தொடர்பில் அவர்களே தீர்மானிக்கட்டும்.

**கேள்வி: இந்த வீடு தொடர்பில் வடமாகாண சபை அல்லது வடமாகாண புனர்வாழ்வு அமைச்சு மக்களிடம் ஏதாவது கருத்துக்களைப் பெற்றுள்ளதா?**

**பதில்:** பெறுவதற்கான முயற்சி எடுக்கப்படுகின்றது. இப்போது அந்த வீடு தொடர்பில் சில கருத்துக்களைப் பெறுவதற்குரிய சில முயற்சிகளில் ஈடுபட்டுள்ளோம். எங்களுடைய கௌரவ முதலமைச்சர் அவர்களுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி மக்கள் கருத்தறியும் நடவடிக்கையை மேற்கொள்வோம். ஏற்கனவே பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள அந்த வீடுகள் அமைந்துள்ள பகுதிக்குரிய பிரதேச செயலாளர் ஊடாக அவ்வாறு அமைக்கப்பட்ட இரு வீடுகளிலும் கருத்துக்களை பெறுவதற்கான குறிப்புக்களை வைத்துள்ளார்கள். அந்த வீடுகளை பார்த்த பின்னர் மக்கள் அதில் தமது கருத்துக்களை குறிப்பிட முடியும். ஆகவே, பொதுமக்கள் கட்டாயம் அங்கு வந்து தமது கருத்துக்களை சொல்ல வேண்டும். ஏனெனில் அவர்கள் தான் அங்கு வாழப்போகிறவர்கள். அதேபோல் நாங்களும் எமது வடமாகாண கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை பெற்று அதனை மத்திய அரசுக்கு வழங்குவோம்.

**கேள்வி: இதேவேளை, ஒரு வீட்டுக்கு 21 இலட்சம் ரூபாய் செலவு செய்வதை கூட முதலமைச்சர் எதிர்த்துள்ளார். இது பற்றிய உங்களது பார்வை என்ன?**

**பதில்:** முதலமைச்சர் சொன்ன கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடிய கருத்து. ஏனென்றால் ஒருவருக்கு 21 இலட்சம் பெறுமதியான வீடு கிடைத்தால் சந்தோசம். அது வசதி கூடிய வீடாக இருக்கும். அந்த 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டை அரசாங்கம் வடக்கு, கிழக்கு பகுதியில் யுத்தத்தால் பாதிப்படைந்து மீள்குடியேறுகின்ற மக்கள் எல்லோருக்கும் வழங்கும் என்றால் எந்த எதிர்ப்பும் இல்லை. 40 இலட்சத்தில் கட்டிக் கொடுத்தால் கூட சந்தோசம் தான். என்னைப் பொறுத்தவரை நான் யோசிப்பது, முதல் 5 இலட்சம் வீடு கொடுத்ததால் எல்லோருக்கும் அதுதான் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய நிலைப்பாடு இல்லை. எங்களுடைய மக்களுக்கு ஒரு பகுதி வழங்கப்பட்டு முடிந்து விட்டது. புதிய அரசாங்கம் இனி தரப்போகும் வீடுகளை நல்ல வசதியான வீடுகளை வழங்குவதற்கு தயாராக இருந்தால் அதை ஏற்றுக் கொள்ள தயார். அதனால் முதல் கொடுத்த தொகைக்கே வீட்டுத்திட்டத்தை வழங்க வேண்டும் என்பது எனது கருத்து இல்லை. நல்ல வீடு கொடுத்தல் சந்தோசம். ஆனால் கேள்வி என்னவென்றால் இந்த 21 இலட்சம் பெறுமதியான 65,000 வீடுகள் தானா அல்லது மீள் குடியேறிய அனைவருக்கும் வீடுகள் வழங்கப்படுமா? என்பதே. அனைவருக்கும் வழங்கப்படும் என்றால் 21 இலட்சம் பெறுமதியான வீடு வழங்குவதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் மீள்குடியேறிய எல்லோருக்கும் வீடுகள் வழங்கப்படாது இவ்வளவு பெறுமதியில் தான் மொத்தமாக வீடுகள் வழங்க முடியும் என்றால் அந்த 21 இலட்சத்தை பிரித்து இரண்டு பேருக்கோ அல்லது மூன்று பேருக்கோ வீட்டுத்திட்டத்தை வழங்க முடியும். இதன் மூலம் மீள்குடியேறிய பலர் வீட்டுத் திட்டத்தை பெற வாய்ப்புப் கிடைக்கும். மீள்குடியேறிய அனைவருக்கும் வீட்டுத்திட்டம் கிடைக்க வேண்டும் என்பதே எனது கருத்து.

உங்களுடைய கருத்துப் பகிர்வுக்கு நன்றி அமச்சர் அவர்களே..!

**இலண்டன் நம்பிக்கை ஒளியின் தாயக வேலைத்திட்டங்கள் தொடர்பாக உங்கள் நிலைப்பாடு என்ன..?**

கடந்த 2009ம் ஆண்டு யுத்த காலப்பகுதியில் இருந்து இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனம் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக வாழ்வாதாரம், கல்வி, இடர்முகாமைத்துவ உதவி, விவசாய உதவி, விசேடமாக யுத்தத்தில் உடல் அங்கங்களை பறிகொடுத்தவர்கள் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ உதவி என பன்முகப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை செய்து வருவதை நான் அறிவேன் புலம் பெயர்ந்த எமது தாயக உறவுகளின் உதவிக்கரம் நீட்டும் இந்த மனிதாபிமான சேவை தொடரவேண்டும் யுத்தத்த இழப்புக்களை சந்தித்த எமது மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு புலம் பெயர்ந்த அமைப்புக்கள் முன்வரவேண்டும் அந்த வகையில் நாட்டின் தேவையறிந்து வாழ்க்கை தரத்தை உயர்த்தும் இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்துக்கு வடமாகாணம் சார்பில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரியப்படுத்துகின்றேன். நன்றி

உங்களுடைய காத்திரமான கருத்துக்களுக்கு நம்பிக்கை ஒளி செய்திப்பிரிவின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# நம்பிக்கை ஒளியின் பயனாளிகளை நேரில் சென்று சந்தித்து அவர்களின் நிலைப்பாடுகளை கேட்டறிந்த புலம்பெயர்ந்த உறவுகளின் உன்னத பணி..

## உதவிக்கரம் நீட்டுவதற்கு துடிக்கும் புலம்பெயரந்த உறவுகள்..!



யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தாயக உறவுகளின் விழிநீர் துடைத்து வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் சேவைகள் கடந்த ஏழு வருடங்களுக்குள் படிப்படியான வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது.

வாழ்வாதாரம், கல்வி, விசேட தேவைக்குற்பட்டவர்களுக்கான மருத்துவ உதவி, விவசாய உதவி, மீன்பிடித் தொழிலுக்கான உதவி, சுயதொழில் ஊக்குவிப்பு உதவி, சத்துணவுத்திட்டம், கற்பித்தல் செயற்பாடுகளென திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு தாயகத்தின் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முயற்சியில் இலண்டன் நம்பிக்கை ஒளி இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை ஊடாக மேற்கொண்டு வருகின்றது.

தாயக வேலைத்திட்டங்களுக்காக உதவி செய்யும் ஒவ்வொரு புலம்பெயர்ந்த உறவுகளும் நம்பிக்கை ஒளியின் வேலைத்திட்டங்களை கண்காணிப்பதற்கும் மீளாய்வு செய்வற்கும் உரிமையும் கடமையும் இருக்கின்றது. இதன் படி விடுமுறையில் தாயகத்துக்கு வருகை தரும் ஒவ்வொருவரும் கிராமப்புற மக்களின் தேவைகள் வாழ்க்கை முறைகள் தொடர்பாக அறிந்திருக்கவேண்டியது காலத்தின் தேவை அவற்றிலும் நம்பிக்கை ஒளியின் திட்ட செயற்பாடுகளையும் உதவித்திட்டங்களையும் அவதானிப்பது அவசியம்.

இதன்படி கடந்த மாதம் இலண்டனில் இருந்து விடுமுறைக்காக வருகைதந்த இரண்டு புலம் பெயர்ந்த உறவுகள் தமது விடுமுறைக் காலத்தில் ஒருநாளை யுத்தத்தில் பாதிக்கப்பட்ட உறவுகளுடன் கழித்தனர். இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையினால் இவர்கள் இருவரையும் கிராமப்புறங்களுக்கு அழைத்துச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுடன் நேரடியாக கதைத்து அவர்களின் நிலைப்பாடுகளை அறிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கினோம். பிரபந்தனாறு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, ஓமந்தை, வவுனியா ஆனந்தபுரம் ஆகிய கிராமங்களில் வறிய குடும்பங்களுடன் கதைத்து அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக அறிவதற்கு களம் அமைத்து கொடுக்கப்பட்டது.

சிரமத்தை பார்க்காமல் ஒவ்வொரு குடும்பத்துடனும் அன்பாக கதைத்து அவர்களின் கஷ்ட துன்பங்களை கேட்டறிந்து எவ்வாறாவது உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் மக்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிய புலம் பெயர்ந்த உறவுகளான ஆர்.நவபாலன்.ரி.தனரூபன் இருவருக்கும் நம்பிக்கை ஒளி இலண்டன் தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம் உங்களின் உதவிகளை எதிர்பார்க்கும் குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டமுன்வருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.



தமது விடுமுறைக் காலத்தை வெறுமனே உறவினர் நண்பர்களுடன் மட்டும் கழிக்காமல், பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் தேவைகளை அறிந்து கொண்டு உதவிக்கரம் நீட்டும் மகத்தான பணிகளை செய்வதற்கு ஒவ்வொரு புலம் பெயர்ந்த உறவுகளும் முன்வரவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாக சந்திப்பதற்கு இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை உதவி செய்யும். புலம் பெயர்ந்த ஒவ்வொரு உறவுகளும் தாயக உறவுகள் மீது அளவு கடந்த அன்புடனும் அக்கறையுடனும் இருப்பதை நாம் அறிவோம் இருந்தும் உங்கள் வேலைப் பழுக்களுக்கு மத்தியில் தொண்டு வேலைகளை நேரடியாக செய்வதற்கு நேரம் போதாமல் இருப்பதையும் நாம் அறிவோம் இதற்கு இலகுவான ஒரே வழி இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் கைகோருங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு உதவிக்குமான முழுமையான ஆதாரங்களும் அறிக்கைகளும் சமர்ப்பிப்போம். உங்கள் உதவி பாதிக்கப்பட்ட உறவுகளை நேரடியாக சென்றடைவதை உறுதிப்படுத்தும் ஆதாரங்களை உங்களுக்கு சமர்ப்பிப்போம் நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு ரூபாயும் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடையும் என்பதில் ஐயம் இல்லை.

GOLD SPONSOR

Abi Diamond
020 8423 0055

Abis Cash & Carry

SILVER SPONSOR

SUBARA BUSINESS CENTRE
SUBARA
0203 119 1111

BRONZE SPONSOR

SSR TEXTILES
EASTHAM
020 8514 3199

OTHER SPONSORS

YAARL EXPRESS : 0208 868 3861
THINESH JEWELLERY : 0208 613 9569
S.T PARTY SERVICES : 07950 539358
NAMBIKKAI OLI : 0208 617 9343

TICKETS கிடைக்கும் இடங்கள்

SOUTH HARROW
- Abi Dimond
- Abis cash & carry
- Velus Vilaash

WEMBLEY
- Welcome Jewellers

RAYNERS LANE
- Yaarl Express

WALTHAMSTOW
- Empire Lets (75 Forest Road)

SOUTHALL
- Cargil Cars

LEWISHAM
- Thinesh Jewellers

HARROW
- Subara Business Centre

EASTHAM
- S S R Textiles
- S S R Thanga Malikai
- Suriya Jewellers

Abi Diamond & Abis Cash & Carry
பேராதரவில்

GTV இசைக்குயில் 2016



சிறப்பு விருந்தினர்
T.L மகாராஜன்



சிறப்பு விருந்தினர்
இயக்குனர் இமயம்
பாரதிராஜா



Super Singer
ஹரிப்பிரியா



இயக்குனர்
இசையமைப்பாளர்
கங்கை அமரன்

பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உங்கள் திறமைகளை
உலகறியச் செய்ய மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு

Monday 2nd May 2016, 5 pm (Bank Holiday)
Zoroastrian Centre
440 Alexandra Ave, Harrow HA2 9TL

தொடர்புகளுக்கு
0203 468 7523 | 0208 150 3475

GTV
SATELLITE INFORMATION:
EURO BIRD (EB9) Frequency:11727
Polarity: Vertical, Symbol Rate: 27500 and FEC 3/4

David Benson Solicitors
28, MERTON HIGH STREET, LONDON, SW19 1DN

Asylum and Immigration
- Work Permit/Business Visas
- Spouse/Fiancée Visas
- Dependent/Relative Visas
- General Visit Visa
- Family Visit Visa
- EEA Citizen Family Visa
- Asylum
- Appeals to Tribunal and Court of Appeal
- Judicial Review
- Human Rights
- Deportation, Removal and Bail

Civil/Criminal Proceedings
- Breach of Contracts
- Road Traffic Offences

Other Legal Services
- Employment Matters
- Affidavits
- Sponsorship Declaration
- Unmarried Certificate
- Legalisation of Documents

Family/Matrimonial
- Divorce
- Financial Remedy
- Domestic Violence
- Children's Matters including Residence / Contact Disputes
- Care Proceeding

Landlord and Tenant
- Residential Eviction
- Commercial Eviction

⇒ We are right opposite to Sainsbury and Marks & Spencer in Colliers Wood
⇒ By Bus - 57, 131, 152, 200, 219 & 470 ⇒ By Train - Northern Line, Colliers Wood Tube Station

OUR STAFF MEMBERS SPEAK TAMIL, SINHALESE, HINDI, URDU, PUNJABI, CREOLE & FRENCH

Call - 02085408888 Fax - 08701208386
davidbensonsolicitors.uk e-mail: info@davidbensonsolicitors.uk




# மருத்துவம்

## இருமல் மற்றும் நெஞ்சில் தீராத சளியா?





விடாமல் அடிக்கடி இருமிக் கொண்டிருப்பவர்களும், நெஞ்சில் சளி உறைந்திருப்பவர்களும் குறைந்தது ஒரு வாரத்திற்கு இரவில் ஒரு டம்ளர் பாலில் அரை மேசைக்கரண்டி அளவுக்கு மஞ்சள் தூள், மிளகுத்தூளை சேர்த்து அருந்தி வரவேண்டும். நான்கைந்து நாளிலேயே சளி, இருமல் பறந்தோடி விடும்.

இந்த வைத்தியத்தைத்தான் கிராமங்களில் பலர் கடைபிடிக்கிறார்கள். மிளகையும், மஞ்சளையும் சமையலில் அன்றாடம் நாம் சேர்த்துக் கொள்வதற்குக் காரணம் அவற்றின் மருத்துவ குணங்களால் தான். பொதுவாக மஞ்சள் ஒரு நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. இது உடலில் உட்புகும் நோய்க்கிருமிகளை அழித்தொழிக்கும் ஆற்றல் பெற்றது. அதேபோல மிளகுக்கும் அதீத மருத்துவ சக்தி உள்ளது. உடலில் உருவாகும் வாய்வுத் தொந்தரவுகளை அறவே நீக்குகிறது. சளியை விரட்டும் சக்தி மிளகுக்கு உள்ளது. மிளகின் காரமும், மஞ்சளின் நோய் எதிர்ப்பு சக்தியும் ஒருங்கே உடலில் சேரும்போது, இருமலாவது, சளியாவது, போயே போயிடும்.

### தேவையான பொருட்கள்...

பால் -1 கப்
மிளகு - 10
மஞ்சள் தூள் - அரை மேசைக்கரண்டி
சுகர் லைட் அல்லது பனங்கற்கண்டு - 1 மேசைக்கரண்டி

### செய்முறை....

மிளகை பொடித்துக் கொள்ளவும். பாலை காய்ச்சி கொள்ளவும்.

காய்ச்சிய பாலில் (பால் சூடாக இருக்க வேண்டும்) மிளகு, மஞ்சள் தூள், சுகர் லைட் அல்லது பனங்கற்கண்டு போட்டு நன்கு கலந்து பருகவும். இந்த பாலை சூடாக குடித்தால் நன்றாக இருக்கும். இந்த மிளகுப் பால் தொண்டை வலி, சளி போன்ற பிரச்சனைகளுக்கு மிகவும் நல்லது.

## இதயத்தை பாதுகாக்கும் அவரைக்காய்



அவரைக்காய் கெட்ட கொழுப்பு குறைத்து, ரத்த அழுத்தத்தைச் சீராக்கி, நரம்புகள் மற்றும் இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும். இரும்புச்சத்து, ஆண்டிஆக்சிடண்ட் நிறைந்துள்ளதால், ரத்தசோகை குணமாகும். அவரைக்காயில் உள்ள இரும்புச் சத்து, நம் உடல் சிவப்பு இரத்த அணுக்கள் உற்பத்தி செய்ய மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

வைட்டமின்கள் ஏ மற்றும் சி, நீர்ச்சத்து, புரதம் நிறைந்துள்ளது. அவரைககாயில் பொட்டாசியம், எலெக்ட்ரோலைட்டுகளின் உதவியுடன் நம் உடலில் உள்ள நீர் மற்றும் அமிலங்களின் அளவுகளை சீராக வைத்துக்க உதவுகிறது. நார்ச்சத்து நிறைந்துள்ளதால், மலச்சிக்கல் பிரச்சனை தீரும். கர்ப்பக் காலத்தின் ஆரம்பத்தில் சாப்பிட்டால், குழந்தையின் மூளை வளர்ச்சி சிறப்பாகும். நம் எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்குத் தேவையான கல்சியச் சத்தும் அவரைக்காயில் கணிசமான அளவில் உள்ளது.



# தலை முடி பராமரிப்பு

வெந்தயத்தை ஒரு தேக்கரண்டி எடுத்து நீரில் ஊறப் போடவும். மறுநாள் காலை அதை விழுதாக அரைத்து தலையில் தேய்த்து ஒரு மணிநேரம் ஊறவிடவும், பிறகு கடலை மாவு கொண்டு தலையை நன்றாக அலசவும்.

பின்னர் வினிகர் திரவத்தை தலையில் தடவி, சிறிது நேரம் கழித்து அலசலாம்.

வேப்பிலையை அரைத்து தலையில் தடவி, 15-20 நிமிடம் கழித்து தலைமுடியை அலசலாம்.

இரண்டு முட்டைகளை உடைத்து அதனுடன் ஆலிவ் எண்ணெயை சேர்த்து தலையில் நன்றாக தேய்க்கவும். 15-20 நிமிடங்கள் கழித்து அலசலாம்.

வெந்தயத்தை தூளாக்கி அதில் பன்னீரைச் சேர்த்து தலையில் தேய்த்து 20-30 நிமிடங்கள் கழித்து அலசவும். சீயக்காய், சிறிது துளசி மற்றும் செம்பருத்தி இவற்றை கலந்து தலையில் தேய்த்து 30 நிமிடம் ஊறிய பிறகு தலையை அலசவும். நெல்லிக்காய் பொடியுடன், நீர் மற்றும் சர்க்கரை சேர்த்து அருந்தி வரவும், முடி வளர்ச்சிக்கு இது பெரிதும் உதவும்.

செம்பருத்தியை விழுதாக அரைத்து தலையில் தேய்க்க, 15-20 நிமிடங்கள் கழித்து அலசவும்

ஊற வைத்த வெந்தயம், சீயக்காய் தூள், நெல்லிக்காய் பொடி, காய்ந்த எலுமிச்சை அல்லது எலுமிச்சை தோல், 2 முட்டைகள் ஆகியவற்றை நன்றாகக் கலந்து கூழ் போல் செய்யவும். இதை தலையில் தேய்த்து 20 நிமிடம் பொறுத்திருந்து தலையை ஷாம்பூ மூலம் அலசவும்.



தலையில் எலுமிச்சையை நன்றாகத் தேய்த்து 30 நிமிடம் காத்திருக்கவும், பிறகு ஷாம்பூ மூலம் அலசவும், 2 அல்லது 3 வாரங்களுக்கு இதைச் செய்தால் முடி மீண்டும் கறுகறுவென வளரத் தொடங்கும்.

தேயிலை சிலவற்றை எடுத்துக் கொண்டு தண்ணீரில் கொதிக்க விடவும், தேநீரை எடுத்துவிட்டு அதனுடன் எலுமிச்சை சாறை சேர்த்து கலந்து தலைமுடியை நன்றாக அலசினால் சிறந்த பயண் கிடைக்கும்.



# யுத்தத்தில் பெற்றோரை பறிகொடுத்த நிலையிலும் சாதனை படைத்த சகோதரிகள்..!

முல்லைத்தீவு மாவட்டம் அலம்பில் கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட செம்மலை கிராமத்தில் உவர்காற்று, சுட்டெரிக்கும் சூரியக்கதிகர்கள் நேரடியாக தாக்கும் கடற்கரை பிரதேசத்தில் ஓலைக் கொட்டகையில் அம்மம்மாவின் பராமரிப்பில் வாழ்ந்துவரும் அரசரத்தினம் கஜானா. கடந்த யுத்தம் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இவளுடைய அம்மா அப்பா இருவரையும் காவு வாங்கிவிட்டது. இந் நிலையில் கஜானாவுக்கும் அவளுடைய தங்கை அனுசாவுக்கும் துணையாக இருப்பவர் அம்மம்மா அன்னலட்சுமிதான்.

குப்பி விளக்கின் ஒளியில் கல்வி கற்ற கஜானாவும் தங்கை அனுசாவும் தனிமையில் இருக்கும் தாம் கல்வியில் சாதிக்கவேண்டும் என்ற இலட்சியத்துடன் அடிப்படை வசதிகளின்றி இருக்கும் மிகவும் பின்தங்கிய கிராமத்திலிருந்து முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு சைக்கிளில் சென்று கல்வி கற்று பல்கலைக் கழகம் தெரிவாகியுள்ளனர்.

கஜானா யாழ் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையிலும் அனுசா மட்டக்களப்பு விபுலானந்தா பல்கலைக்கழகத்தில் கலைத் துறையிலும் கல்வி கற்பதற்கு அனுமதி கிடைத்தது இவர்கள் இருவருடைய அயராத கடின உழைப்புக்கு கிடைத்த ஊதியம் என்றே சொல்லவேண்டும்.

வயது முதிர்ந்ததையும் பொருட்படுத்தாது கடற் கரையில் கரைவலை மீன்களை தெரிவுசெய்து கொடுத்தல் கரைவலை மீனவர்களுக்கு உதவி செய்தல் மற்றும் பலகார வகைகள் சுட்டு கடைகளுக்கு கொடுத்தல் போன்றவற்றால் ஈட்டப்படும் சிறிய வருமானத்திலேயே கஜானாவையும், அனுசாவையும் பராமரிக்கின்றார் இவர்களுடைய அம்மம்மா. அன்னலட்சுமி.

யுத்தத்தில் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த நிலையில் கல்வியை தொடரும் வறிய மாணவர்களுக்கு உதவி செய்யும் இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மகத்தான சேவை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந் நிலையில் யுத்தத்தில் முற்று முழுதாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்திலும் வறிய மாவணர்களை நோக்கிய தேடலை நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் இணை நிறுவனமான இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை மேற்கொண்டு தகவல்களை தரவுகளாக திரட்டி உதவி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் கடந்த வாரம் முல்லைத்தீவு செம்மலை கிராமத்தில் கிராமசேவகரின் உதவியுடன் பல்கலைக்கழக மாணவர்களின் விபரங்களை கேட்டறிந்து அவற்றுள் மிகவும் வறுமையில் கல்விகற்கும் கஜானா குடும்பத்தை தெரிவு செய்து அவருடை வீட்டுக்கு நேரடியாக சென்றிருந்தோம்.

செம்மலை கடற்கரை குடியிருப்பில் தகரத்தினால் அமைக்கப்பட்ட கூரை சுற்றிவர கிடுகால் வேயப்பட்ட வீடு உள் புறம் சப்பு பலகையால் தயாரிக்கப்பட்ட கால் நடுக்கமுடைய மேசை நிறைய பாடப்புத்தகங்களை சுமந்தபடி இருந்தது. மறுபுறம் அடுப்பங்கரையில் அடுப்பு ஊதிக்கொண்டிருந்தார் கஜானாவின் அம்மம்மா அன்னலட்சுமி நாம் சென்றிருந்த போது வீட்டில் அம்மம்மா மட்டும் தனிமையில் சமையல் வேலை செய்து கொண்டிருந்தார். அனுசா மட்டக்களப்பு பல்கலைக்கழகத்துக்கு சென்றுவிட்டார். இந் நிலையில் நாம் அன்னலச்சுமியை அனுகி குடும்ப விபரங்களை திரட்டி அவர்களுடைய தற்போதைய வாழ்க்கை முறை தொடர்பாக கேட்டறிந்தோம். இதற்கு இடையில் அணல்காற்றை தாங்கி நண்பகல் வெய்யிலில் வேருத்து விறுவிறுக்க சைக்கிளை மிதித்தபடி தனியார் கல்வி நிலையத்தில் ஆங்கிலக்கல்வியை கற்றுவிட்டு வருகை தந்தார். அவசர அவசரமாக எங்களிடம் பேசிவிட்டு நண்பகல் இரண்டு ஒருமணிக்கு முள்ளியவளையில் மீண்டும் ஆங்கில கல்வியை கற்க அதே சைக்கிளில் சென்று விட்டார்.

இவ்வாறு காலநிலையையும் வறுமையையும் பொருட்படுத்தாமல் கல்வி கற்கும் இந்த கஜானாவுக்கும் அவளுடைய தங்கை



அனுசாவுக்கும் பல்கலைக்கழகத்துக்கு சென்று கல்வி கற்க போதிய வருமானம் இன்மையால் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருவதாக இப் பிரதேச்த்தின் கிராமசேவகர் கூறினார்.

மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் கல்வி கற்கும் இந்த இரண்டு மாணவிகளுக்கும் அவர்களுடைய போக்குவரத்து, உணவு, கற்றல் உபகரணங்களுக்கான செலவு, போன்றவற்றுக்கு உதவிகள் தேவைப்படுகின்றது அரசினால் வழங்கப்படும் சலுகை இந்த மாணவிகளுக்கு போதாமல் இருக்கின்றது ஆகவே கருணை உள்ளம் கொண்டவர்கள் இந்த இரண்டு மாணவிகளின் பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளுக்கு மாதாந்தம் 5,000 இலங்கை ரூபாவை வழங்கி உதவி இந்த இரண்டு மாணவிகளின் எதிர்கால வாழ்க்கைக்கு உதவிசெய்யுங்கள் மேலதிக விபரங்களுக்கு இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.





# நம்பிக்கை ஒளி இலண்டன்
# Ray Of Hope Uk







ஊரிழந்து உறவிழந்து வேரறுந்து வாழும் எமது தாயக உறவுகளுக்கு உதவிக்கரம் நீட்டும் நம்பிக்கை ஒளியின் மகத்தான சேவையில் மாதாந்தம் £2 (பவுண்ஸ்களை) செலுத்தி நீங்களும் இணைந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 02086179343

Email:- roh theroh.org facebook.com/theroh.org www.theroh.org

Account Name - Ray of hope people,
Account Number - 43641341
Sort code - 20-92-60, Bank Name - Barclays.

நம்பிக்கை ஒளி பத்திரிகை உங்கள் வாசல் தேடிவர ஒரு வருடத்துக்கு £25மட்டுமே.

## SUBSCRIPTION FORM

Name:............................................................

Address: ........................................................

........................................................

post code:........................................................

Telephone:........................................................

மேலே உள்ள விண்ணப்ப படிவத்துடன் £25 க்கு 'Ray of hope people" பெயரில் காசோலையையும், G05, Courtenay House, 10 Courtenay Road, East Lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நம்பிக்கை ஒளி Ray Of Hope Tel - 0044-2086179343 Mobile - 07853071088
Email - roh@theroh.org Wep - www.theroh.org

## Ray of hope Bank Details

Account Name - Ray of hope people,
Account Number - 43641341
Sort code - 20-92-60
Bank Name - Barclays.

## Office Address

G05, Courtenay House, 10 Courtenay Road, East Lane, Business Park, Middlesex, Wembley, HA9 7ND, UK.

நம்பிக்கை ஒளி RAY OF HOPE

இலண்டன் நம்பிக்கை ஒளி தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் தாயக வேலைத்திட்டங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள Ray of Hope நம்பிக்கை ஒளி Facebook பக்கத்தில் பார்வையிடுங்கள்